பராசக்தி

திரைக் கதை - வசனங்கள்

விலை 8 அணா

பராசக்தி

மு. கருணாநிதி

M. ANGAPPA
NEWS AGENT
14, CLOTH BAZAAR ST
TIRUPUR

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
10/8. முத்து நகர் திருப்பூர்.

தொகுப்பாளர்கள்:
எஸ். பி. சண்முகவேல்
'அலெக்ஸ்'

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
திருப்பூர்.

பத்மா பதிப்பகம்
சென்னை - 13

—பராசக்தி—

திரைக் கதை—வசனம்—பாடல்கள்

காட்சி—1

[மதுரையில் கல்யாணிக்கு திருமணம் நடக்கப்போகும் சமயம் அவளது அண்ணன்மார்களான சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன் ஆகிய மூன்று பேரும் இரங்கூனில் இருக்கின்றனர். அப்போது மதுரையில்...ஒரு கூட்டத்தில் நாட்டியம நடைபெறுகிறது]

வாழ்க வாழ்கவே வாழ்க வாழ்கவே
வளமார் எமது திராவிட நாடு (வாழ்க)

சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறலும் செறிந்த நாடு (வாழ்க)

பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளு மலையாளம்
கண்டை நிகர் கன்னட மேனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு (வாழ்க)

அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக்காடு மணக்கும் நாடு (வாழ்க)

ஆற்றில், புனலின் ஊற்றில், கனியின்
சாற்றில், தென்றல் காற்றில், நல்ல
ஆற்றல் மறவர் செயலில், பெண்கள்
அழகில், கற்பில், உயர்ந்த நாடு. (வாழ்க)

ஆடல், பாடல் முடிந்தவுடன்......

மாப்பிள்ளை: பெரியோர்களே! இதுவரையிலும் புதுமையின் குரலை புதுமையாட்டத்துடன் கலந்து ரஸித்தீர்கள். இத்தகைய எழில் மிக்க நாட்டின் குழந்தைகள் இந்த மண்மாதாவின்

மடியிலே தவழாமல் வேறு நாடு சென்று வருந்துகின்றனர். இதை நினைக்கும்போது நமது அறிஞர் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. "கடல் நீர் என் உப்பாக இருக்கிறது?" காரணம் கற்பனையாக சொல்லப்போனால்...சொந்த நாட்டிலே பிழைக்க வழி இல்லாமல் அயல்நாடு சென்ற தமிழர்கள் ஏங்கி ஏங்கி வடித்த கண்ணீர்தான் காரணம் என்கிறார். அவ்வளவு என்? இதோ நான் திருமணம் செய்துகொள்ளப் போகும் திருமதி கல்யாணி தன் சகோதரர்களின் முகத்தையே பாத்ததில்லையாம்! அவ்வளவு இளமையிலேயே அவர்கள் இரங்கூன் சென்றுவிட்டனர். அவர்கள் மட்டுமல்ல! எத்தனையோ குடும்பங்கள்! எத்தனையோ இளைஞர்கள் ஆப்பரிக்காவின் காடுகளிலே, இலங்கை ரப்பர் தோட்டங்களிலே, மலேயாவிலே, பர்மாவிலே பாடுபடுகிறார்கள். அவர்கள் எல்லாம் நம் திருநாட்டுக்குத் திரும்பவேண்டும். அதைத்தான் இந்த அழகிய ஆடலும், பாடலும் நமக்கு நினைவூட்டுகிறது.

காட்சி—2

[இரங்கூனில்......குணசேகரன் தூங்கிக்கொண் டிருக்கும்போது ஞானசேகரன் வருதல்]

ஞான: தம்பி! தம்பி!! குணசேகரா! டேய்!.எழுந்திரு! இன்னுமா தூங்குறே? எழுந்திரப்பா! தம்பி டேய்! குணசேகரா!

[ரேடியோ வைத்தல்]

டேய்! கும்போதரனம்! எழுந்திரு!

குணசேகர்: ஹீம்...அய்யய்யோ...என்னண்ணே! தூங்குறபோது வந்து விளையாண்டுகிட்டு......ஹீம்...

[இந்நேரம் சந்திரசேகர் வருதல்]

சந்திர: என்ன! ஆரம்பிச்சிட்டீங்களா? பொழுது விடிஞ்சிட்டுதில்ல!

ஞான: அண்ணா! குணசேகரன் இப்பத்தான் எழுந்திருச்சான்!

குணசேகர்: இல்லே யண்ணா! நான் காலையிலே அஞ்சரை மணிக் கெல்லாம் எழுந்திருச்சிட்டேன்!

ஞான: இல்லண்ணா! பொய் சொல்லுறான்.

சந்திர: ஞானசேகரா! எம்பா பொய் சொல்றே? தம்பிக்குத்தான் சூரிய உதயத்தை பார்க்கவே பிடிக்காதே! ஹீம்...... ஊரிலே இருந்து......

குணசேகர்: தங்கச்சி போட்டோ வந்திருக்கா?

சந்திர: தங்கச்சிக்கு கல்யாணம் நிச்சயம் செய்து அப்பா கடிதம் எழுதி இருக்காரு!

குண: அட! பார்ரா!

ஞான: அப்ப எப்பண்ணு புறப்பட?

சந்திர: டிக்கட் புக் பண்ணச்சொலி போன் பண்ணி இருக்கேன். பதில் இப்ப வந்திடும்.

[அண்ணியிடம் போதல்] அண்ணி! குட் நியூஸ்! கல்யாணிக்கு கல்யாணம் உங்களுக்குத் தெரியுமா?

ஞான: அண்ணிக்குத்தானப்பா முதல்லே தெரிஞ்சிருக்கும்! இல்லையண்ணு......

[சந்திரசேகரன் அவன் மனைவி சரஸ்வதியினுடைய தந்தையின் போட்டவை பார்த்து கண்ணீர் விடுகிறுன்.]

சரஸ்வதி: தங்கச்சிக்கு கல்யாணம்! என் இப்படி திடீர்னு வருத்தப்பட்றீங்க?

சந்திர: இல்லே......ஒங்க அப்பா படத்தை பார்த்தவுடன் மனசே மாறிடுச்சி! நம்ம கல்யாணத்துக்கு அவரு இருந்து எவ்வளவோ நல்லா நடத்தினரு! இப்ப இந்தக் கல்யாணத்துக்கும் இல்லேண்ணுதான்......

சரஸ்வதி: அதுக்குத்தான் ஒங்க அப்பா இருக்காரே!

சந்திர: என்ன இருந்தாலும் சீரழிந்த குடும்பத்தை செல்வமாக்கினவரு அவருதானே! சின்ன வயசிலே இருந்து அவரு மடியிலேயே விளையாண்டோம்.

[காபி குடிக்க உட்காருகின்றனர்.]

ஞான: (குணவைப் பார்த்து) டேய்! கீழே வைடா! பல் விளக்குறதுக்குள்ளே என்னடா காபி!

சந்திர: ஞானசேகரா! நீ சும்மா இரப்பா! தம்பி! நீ சாப்பிடு!

ஞான: கல்யாணிக்கு என்ன பரிசு கொடுக்குறது?

சந்திர: கல்யாணிக்காக நம்ம இருதயங்களே துடித்துக் கொண்டிருக்கின்றன! இதைவிட நம்மால் வேறு என்ன அளிக்க முடியும்.

[போன் மணி அடிக்கிறது.] ஹல்லோ...சந்திரசேகர் ஸ்பீக்கிங்]

பேசுபவர்: டிக்கட் கேட்டீங்களாமே?

சந்திர: ஆமா......

பேசுபவர்: எத்தனை?

சந்திர: போர்......நாலு......

பேசுபவர்: நாலா? முடியாதே சார்!

சந்திர: முடியாதா? எப்படியாவது முயற்சி செய்யுங்க சார்! பிளீஸ்......

சரஸ்வதி: பெரிய பேரிஸ்டர்! இவருக்கு எத்தனை பிளீஸ் போட வேண்டியதிருக்கு!

பேசுபவர்: உங்களுக்குத் தெரியாததா? வார் டைம்......

சந்திர: வார் டைம் சரி சார்! எங்க குடும்பத்துக்கு முக்கியமான மேரேஜ்! கண்டிப்பாக எல்லோரும் போகத்தான் வேண்டும்.

பேசுபவர்: பேமிலிக்கு ஒருத்தரைத்தான் அலவ் பண்றது! மொத்தமே மூந்நூறு சீட்தான்! ஒரு டிக்கட்டுதான் இருக்கு......

சந்திர: சரி! புக் பண்ணுங்க.

ஞான: என்ன அண்ணா?

சந்திர: நாளைக்கு சென்னைக்கு புறப்பட்ற கப்பல்லே மொத்தமே முன்னூறு டிக்கட்தானும்! அதுவும் குடும்பத்துக்கு ஒருத்தர்தானும்!

சரஸ்வதி: அப்படின்னு யாரு போறது?

சந்திர: ஞானசேகரா! தங்கைக்கு வேண்டிய புடவை, நகையை யெல்லாம் எடுத்து பெட்டிக்குள்ளே வைச்சுக்கிட்டு குணசேகரனை வழி அனுப்ச்சிட்டு வா.

[ஞானசேகரன் வருந்துகிறான்]

சந்திர: ஞானசேகரா! எம்பா கவலைப்பட்றே? முதல்லே தம்பி போகட்டும்! அடுத்தது நம்மெல்லாம் போகலாம்.

ஞான: அண்ணா! அதுக்குள்ளே யுத்த நிலைமை ரொம்பவும் மோசமாகிட்டா......

சந்திர: எப்படியும் போய் சேரலாம். தங்கையின் வாழ்விலே பொன்விழா! அதை நம்ம எல்லோரும் சேர்ந்து பார்க்க கொடுத்து வைக்கல்லே!

சரஸ்வதி: நான் கல்யாணிக்காக அரை டஜன் புடவையும், ஜாக்கெட்டும் தர்றேன்! பெட்டியிலே இடம் காணுமா?

ஞான: தங்கைக்கின்னு தலைமேலே கூட தூக்கிட்டுப் போவானே! சும்மா கொடுத்தனுப்புங்க அண்ணி!

[குணசேகரன் புறப்படுகிறான்]

காட்சி—3

(மதுரையில்......) [கல்யாணக் கோலத்துடன் கல்யாணி கண்ணாடி முன்னால் கண்ணீர் விட்டுக்கொண்டு......]

கல்யாணி: அண்ணா! என்னை மறந்துவிட்டீர்களா? அம்மா என்று கூப்பிட கொடுத்து வைக்காத எனக்கு அண்ணா என்று கூப்பிட நீங்கள் இருக்கிறீர்கள் என்று நினைத்தேன். பெண்ணாகப் பிறந்தால் பெருந்துளி என்பார்களே! எனக்கு மூன்று அண்ணன் மார்கள் இருந்தும் என் கல்யாணத்தை காண வரவில்லையே......

பார்வதி: கல்யாணி! அழாதேம்மா! அசந்தர்ப்பங்கள் எல்லோருக்கும்தானே ஏற்பட்றது......வருவாங்க......

கல்யாணி: அசந்தர்ப்பம்...இல்லை! என் அதிர்ஷ்டம்!

மாணிக்கம்: கல்யாணி! ஹீம்......நேரம் ஆகுது.

கல்யாணி: அப்பா! என் மணக் கோலத்தைக் காண இன்னும் அண்ணன் ஒருவரும் வரவில்லையே......

மாணிக்கம்: வருவாங்கம்மா! இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு வருவார்கள்! அழாதம்மா.

கல்யாணி: அப்பா! கல்யாணத்தை தள்ளி வைச்சிக்கிட்டா என்னப்பா!

மாணிக்கம்: அய்யர் வைச்ச நாளம்மா! தவறினால் தகராறு வந்திடும்! வா! எல்லோரும் காத்துக்கிட்டு இருக்காங்க.

[திருமணம் இனிது நடந்தேறுகிறது.]

காட்சி—4

[மதுரையில்...கல்யாணி தன் கணவனோடு மாங்குயில் கூவும் பூஞ்சோலையில் பைந்தமிழ் பண் பாடி மகிழ்தல்]

தங்: இல்வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
என் இதயராணி நபம்

கல்: இந்த தீபத்திலே சுடராய்த் திகழ்வதேன்
தீரனின் நபம்

தங்: இளமாமயில் நபம்

கல்: இல் வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
நம் காதல் தீபம்

தங்: கனியே! கன்னல் தமிழே! அழுதே
பனி தூங்கும் மலரே! நிலவே!

கல்: கனிவான மொழியால் எனையே
கவர்ந்தீரே காந்தச் சிலையே

தங்: உனைக் காணும் போது நெஞ்சில்
ஊறிடும் உணர்ச்சி தனையே எழுதவோர்
எழுத்தும் இல்லையே

தங்-கல்: திருநாளிது போய்தினம் ஆடிப்பாடியே
தேன் போல் வாழ்வோம் (இல்)

காட்சி—5

[இரங்கூனில்......]

ஞான: (பேப்பர் படித்தல்) உலகப் போரின் உச்ச நிலை! ஜப்பான் யுத்த மூஸ்தீபு! இரங்கூன் கடலோரங்களில் எதிரிகள்! கப்பல்கள் இந்தியா போய்ச் சேரவில்லை......அண்ணா......இந்தச் சேதியை அப்பாவும் தங்கையும் கேள்விப்பட்டால் ரொம்பவும் வருத்தப்படுவாங்க! கல்யாணக் காரியமெல்லாம் தடபுடலா நடந்துக்கிட்டு இருக்கும்.

சந்திர: ஆமாம் மணக்கோலத்தி லிருக்கும் தங்கையை பார்க்க முடியாத பாபியாயிட்டோம்.

[இந்த நேரம் யுத்தச் செய்தி ரேடியோவில் சொல்லப்படுகிறது]

சரஸ்வதி: நாம் இப்படி எத்தனை நாளைக்குத்தான் உயிர் வாழுகிறதாம்.

ஞான: உயிர் தப்புவதே பெரிய கஷ்டம்போல் இருக்கே.

சந்திர: இனியும் நம்ம இங்கு இருக்கக்கூடாது! நடந்தாவது எங்கேயாவது போய்ச் சேருவோம்!

[இரங்கூனைவிட்டு வெளியேறுகின்றனர்)

காட்சி—6

[மதுரையில்......]

மாப்பிள்ளை: கல்யாணி!

கல்யாணி: இதோ வந்துட்டேன்!

மாப்பிள்ளை: ஹீம்......புறப்படு சீக்கிரம்......

கல்: என் பறக்குறீங்க?

[வெளியேறுகின்றனர்.] அப்பா! போய்ட்டு வர்றோம்......

மாணி: சரியம்மா! ஜாக்கிரதையா போயிட்டு வாங்க.

[இந்நேரம் பார்வதி வருகிறாள்.]

கல்: வாங்க அக்கா!

பார்வதி: நல்ல சமயத்திலேதான் வந்திருக்கேன்! எங்கே பிரயாணம்?

மாணி: மாப்பிள்ளை எழுதின கதை! படம் பிடிக்கப் போருங்களாம்!

மாப்பிள்ளை: ஆமா! கல்யாணி ரொம்பநாளா பார்க்கணும் பார்க்கணும்னு தொந்தரவு பண்ணுது.

பார்: போகவேண்டியதுதான்! முழுகாதிருக்கிறபொண்ணு! இப்படி நேரம் காலம் இல்லாமல் வெளியே போனுல் நல்லாவா இருக்கு?

கல்: இன்னிக்கு ஒரு நாளைக்குத்தானக்கா!

பார்வதி: ஹீம்......போம்மா! போ! மாப்பிள்ளை உன் சொன்னபடியெல்லாம் கேட்குருரு! பையன் வந்துல்லே அடக்கணும்.

மாணி: அதுக்குள்ளே பையன்னே தீர்மானம் பண்ணிட்டியா?

பார்வதி: நான் தீர்மானம் பண்ணுட்டாலும், அவங்க ரெண்டு பேருமே தீர்மானம் பண்ணிக்கிட்டாங்களாம். பையனுக்கு பன்னீர்செல்வம்னு வேறே பெயர் வைக்கிறதாக தீர்மானம் பண்ணிட்டாங்களாம்.

மாப்பிள்ளை: அதுகூட இல்லே...பெண் பிறந்தால் நாகம்மான்னு வேறே வைக்கிறதாக தீர்மானிச்சுட்டோம்.

[புறப்படுகின்றனர்.]

மாணி: என் பொண்ணு புத்திசாலிதான்! இந்த சந்தோஷத்தைப் பார்க்க என் மகன்களும் இருந்தால்......

காட்சி—7

[இரங்கூனிலிருந்து புறப்பட்டு வந்த குணசேகரன் சென்னைக்கு வந்து காரில் அமர்ந்திருக்கிறுன்.]

பிச்சைக்காரன்: அய்யா.........

குண: சரிதாம் போ! தமிழ் நாட்டின் முதல் குரலே ரொம்ப நல்லா இருக்கே......(பிச்சை கொடுக்கிறுன்.)

அடுத்தவன்: அய்யா......பிள்ளைகுட்டிகாரன்.

குண: கொடுத்து முடிந்தவுடன்) டிரைவர்! போப்பா!

[காரில் புறப்பட்ட குணசேகரன் பேங்க் வந்து சேருகிறான். பணங்களைப் பெறும்போது அதனைக் கண்ட வீதியிலே நடமாடும் விபச்சாரி அவனை பின் தொடருகிறாள் நெஞ்சிலே நஞ்சு கொண்டு. பணங்களை பெற்றுக்கொண்டு—ஒரு ஹோட்டலில் தங்குகிறான். ஹோட்டல் மானேஜரிடம் டிக்கட் புக்பண்ணிவிட்டு மீண்டும் தன் அறைக்கே திரும்பி உள்ளே நுழைகிறான். அங்கே......] அவனைப் பின் தொடர்ந்த விபச்சாரி படுத்திருக்கிறாள். அதனைக் கண்ட அவன்......]

குண: மன்னிக்கணும்! தவறி ஒங்க ரூமுக்கு வந்துட்டேன்! எல்லா ரூமும் ஒரே மாதிரியாக இருக்கிறதால் வித்தியாசம் தெரியலே.

ஜாலி: ஓ......ஒங்க ரூம் நம்பர்?

குண: செவன்!

ஜாலி: செவன்......என் நம்பர் யெயிட்! பக்கத்து ரூம்! தவறியவள் நான்தான்.

குண: பரவாயில்ல! பரவாயில்ல!

[பையன் காபி கொண்டு வந்து கொடுக்கிறான்.]

குண: காபி......சாப்பிடுங்க......

ஜாலி: ஊம்......வேண்டாம்......தேங்ஸ்

குண: சும்மா சாப்பிடுங்க (கொடுக்கிறான்)

ஜாலி: ஹூம்......ஒங்க ஊரு......

குண: மதுரை......ட்ரெயினை மிஸ் பண்ணிட்டேன்.

ஜாலி: நானும் அப்படித்தான்.

குண: நான் சினிமாவுக்குப் போகணும்! டைம் ஆகுது!

ஜாலி: சினிமாவுக்கா சீ! அது எனக்கு கொஞ்சம்கூட பிடிக்காது.

குண: ஏன்?

ஜாலி: சினிமாவை குளோஸ் பண்ணுவதற்கு ஒரு இயக்கம் ஏற்பட்டால் அதற்கு நான்தான் தலைவியாக இருப்பேன். நம்ம நாட்டுக்கு ஏற்றது பரத நாட்டியம், டான்ஸ். இதுக்குப் போனல் எவ்வளவோ நல்லா இருக்கும். எனக்கு தெரிஞ்ச இடத்திலே டான்ஸ் இருக்கு, வாங்க அங்கேயே போவோம்.

குண: நீங்களும்மா?

ஜாலி: என் இப்படி வித்தியாசமாக நினைக்கிறீங்க? ஒங்க தங்கையாக இருந்தால் அழைச்சிட்டுப் போக மாட்டீங்களா? இப்படித் தப்பாக நினைக்காதீங்க.

குண: சரி போவோம்.

காட்சி—8

[ஜாலக்காரி ஜாலியுடன் ஓர் தாசி வீட்டில் நடக்கும் நாட்டியத்தை வெறுப்புடன் ரஸிக்கிறான் குணசேகரன்]

ஓ...ரசிக்கும் சீமானே வா ஜொலிக்கும் உடையணிந்து
களிக்கும் நடனம் புரிவோம் அதை
நினைக்கும் பொழுது மனம் இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம். (ஓ...ரசிக்கும்)

கற்சிலையும் சித்திரமும் கண்டு, அதன்
கட்டழகிலே மயக்கம் கொண்டு, கற்சிலையின்
கட்டழகிலே மயக்கம் கொண்டு, வீண்
கற்பனையெல்லாம் மனதில் அற்புதமென்றே மகிழ்ந்து
விற்பனை செய்யாதீர் மதியை—தினம்
நினைக்கும்பொழுது மனம் இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம் [ஓ...ரசிக்கும்]

வானுலக மோட்சமதை நாடி, இன்ப
வாழ்க்கையை யிழந்தவர்கள் கோடி—பெண்களின்ப
வாழ்க்கையை யிழந்தவர்கள் கோடி—வெறும்
ஆணவத்தினால், பெரும் ஞானியைப்போல் நினைந்து
வீணிலே அலைய வேண்டாம்—தினம்
நினைக்கும்பொழுது மனம் இனிக்கும் விதத்தில் சுகம்
அளிக்கும் கலைகள் அறிவோம் [ஓ—ரசிக்கும்]

[குணசேகரன் டான்ஸ் கச்சேரியில் ஜாலக்காரி ஜாலியால் மயக்கப்பட்டு—தன் பணத்தைப் பூராவையும் பறி கொடுக்கிறான். இது சென்னையில்.]

[கல்யாணிக்கு ஆண் குழந்தை பிறக்கிறது. அவளது கணவன் கார் விபத்திலே சிக்கி இறக்கிறான். இதைக் கண்ட கல்யாணியின் தந்தையும் மூர்ச்சையாகி தன் உயிரை இழக்கிறார். கல்யாணி தன் குழந்தையுடன் விதவையாகிறாள்....இது மதுரையில்]

காட்சி—9

[சென்னையில்......ரோட்டிலே குணசேகரன் பணத்தை பறிகொடுத்த ஏக்கத்தில் புலம்புகிறான்]

குண: அய்யோ......ஏமாந்தேன்......எவ்வளவோ கஷ்டப் பட்டு கடல் கடந்து வந்தேன். கல்யாணி! காலையிலே உன்னைக் காணலாம், அத்தானைக் காணலாம், அப்பாவைக் காணலாம் என்று அலைமோதிக் கிடந்தேன். நெஞ்சிலே நஞ்சைக் கொட்டி விட்டாள். இதைவிட அவள் என்னைக் கொன்றிருக்கலாமே! கொஞ்சிக் குலாவி கொடுமை செய்துவிட்டாள் வஞ்சகி. எங்கே? வற்றாத ஜீவநதிகள் வளைந்தோடும் நாட்டிலே...வளமான சோலை கள் பூத்துக் குலுங்கும் நாட்டிலே... இந்த வங்கத்திலே வந்த என்னை வந்ததும் வாராததுமாய் வாட்டி வதைத்துவிட்டாள்! என் தங்கைக்கு இப்படியே தரிசனம் தரவேண்டுமா? வறுமை, திருட்டு, வஞ்சகம், விபச்சாரம்! எங்கே? வீரப் பெண்களின் ஏடுகளை எழுதி எழுதி ஏற்றம் பெற்ற தமிழ்நாடே! நீ வீதிகளில் விபச்சா ரிகளைத் திரியவிட்டு கண்களை மூடிக்கொண்டது எத்தனை நாளாய்? சிங்கத் திருநாடே! நீ சிலந்திக் கூடாக மாறியது எப் போது? வந்தாரை வாழவைக்கும் வளமிகு நாடே, சொந்த நாட்டு காரனையே சுரண்டுவது எப்போது? வானத்தை மூட்டும் மாளிகை கள்! மானத்தை விற்கும் மனிதர்கள்! உயர்ந்த கோபுரங்கள்— தாழ்ந்த உள்ளங்கள்! ஏ......தமிழ் நாடே! இதுதானா உன் பெருமை? தகுதி? யோக்கியதை? கல்யாணி...நீ மதுரையிலே... நான் மதராஸ் வீதியிலே மாறாத மனக்குழப்பத்துடன்......ஆத ரிப்பாரற்ற அனாதையாக...யாரிடமும் எதுவும் சொல்லமுடியாத ஊமையாக......அய்யோ......கல்யாணி...கல்யாணி......

காட்சி—10

[சந்திரசேகரன், சரஸ்வதி, ஞானசேகரன் வரும்வழியில் ஜப்பான் விமானங்கள் போட்ட குண்டுகளால் பாதிக்கப் படுகிறார் கள்.]

[சந்திரசேகரனும் சரஸ்வதியும் ஆஸ்பத்திரியில்...]

சந்திர: சார்......ஞானசேகரன் எந்த பெட்லே இருக்கான்?

டாக்டர்: ஞான சேகரனா? அப்படி ஒருவரும் இங்கே இல் லையே! இந்தக் குண்டு வீச்சிலே மீதியிருப்பவர்கள் இவ்வளவு பேர்தான். இதைத் தவிர மற்றவங்களெல்லாம் ஆயிரத்துக்கு மேலே செத்துப் போயிட்டாங்க.

சந்திர: ஆ...ஞானசேகரா! நீ செத்தா போய்விட்டாய்?... சரஸ்வதி...ஊருக்குப் போனவுடன் ஞானசேகரனை எங்கேன்னு! அப்பா கேட்பாரே......கல்யாணிக்கு என்ன பதில் சொல்லு வேன்?

சரஸ்வதி: டாக்டர்! அவருக்கு கொஞ்சம் சொல்லுங்க.

டாக்டர்: மிஸ்டர் சந்திரசேகர்! மனதை குழப்பிக்கிடாதீங்க.

காட்சி—11

[மதுரையில்]

விளம்பரம்: இதனால் யாவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால்......மாசிக்கோனார் தெரு—மாணிக்கம்பிள்ளை வீடாகிய இந்த ஆறும் நம்பர் வீட்டை நாளை பகல் பன்னிரண்டு மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். இது சர்க்கார் உத்தரவு.

ஒருவன்: டேய் தம்பி! பார்ரா இந்த பிரதாபத்தை...இரங்கூனிலே வில்லைக்கொத்து போல மூணு பிள்ளைகள் இருக்காங்க என்று இந்த அப்பாவி மாணிக்கம்பிள்ளை கடனை வாங்கி மகள் கல்யாணத்தை தடபுடலா நடத்திட்டு அந்த மனுசனும் மண்டையை போட்டுட்டான். இரங்கூனில் ஜப்பான் குண்டு வீச்சிலே இந்த பசங்கள் என்ன ஆனாங்களோ? அட அதுதான் போகட்டும்—இந்தப் பொண்ணு கல்யாணி கையிலே இருந்த பணம், நகை நட்டையெல்லாம் விற்று கொடுத்தும் இன்னும் கடன் தீரல்லே...ஹீம்... இன்னும் என்னென்ன ஆகப்போகுதோ?

காட்சி—12

[கல்யாணி கண்ணீர் சிந்திய முகத்துடன் கையிலே குழந்தையை வைத்துக்கொண்டு வாசலிலே உட்கார்ந்து பாடுகிறாள்.]

பூமாலை நீயே......
புழுதி மண்மேலே வீணே
வந்தேன் தவழ்ந்தாய்? [பூமாலை]

பாராயோ என் பன்னீர் செல்வமே
சீரோடு வாழ்ந்தோம்
வேரோடு சாய்ந்தோம்
ராஜாங்கம் போலே வாழ்ந்த வாழ்வும் வீழ்ந்தே
பாழான எந்தன் வயிற்றில் பிறந்தாய் ராஜா!
நீயேன் பிறந்தாய்? [பூமாலை]

பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும்
பசி நீங்கவே உணவும்
பறந்தோடி வந்திடும்
கோடான கோடி ஏழை மாந்தர் வாடும்
சீமான்கள் வாழும் நாட்டில் பிறந்த—நீராஜா!
நீயேன் பிறந்தாய்? [பூமாலை]

[பாடல் முடிந்ததும் பார்வதி வருகிறாள்]

பார்வதி: கல்யாணி! எப்ப பார்த்தாலும் இப்படி கண்ணீரும் கம்பலையுமாக இருந்தால் என்ன ஆகும்? நடக்க வேண்டியதைப் பாரு!

கல்யாணி: இந்தக் குழந்தையை வளர்க்க யாராவது முன் வந்தால் நடக்க வேண்டியது தானாகவே நடக்கும்.

பார்வதி: குழந்தை என்ன செய்யும்? பாவம்......

கல்: அக்கா! இது ஒண்ணும் பாவமில்லை. இந்தக் குழந்தையை வறுமையிலே வளர்க்க முடியாதது தான் பெரிய பாவம்.

பார்வதி: கல்யாணி! நான் சொல்றதைக் கேளு! ஊர்க் கோடியிலே எங்களுக்கு இருக்கும் காலி மனையிலே ஒரு வீடு ஒண்ணு கட்டிக்கோ. ஒரு சாதாரண இட்லி கடை வைத்தால் வயிறு வளர்க்க முடியாமலா போகும்?

கல்: ஆ! இட்லி கடையா?

பார்வதி: தமிழ்நாட்டிலே—தாலி அறுத்தவங்களுக் கெல்லாம் அதுதானே தாசில் உத்தியோகம்.

காட்சி—13

(சென்னையில் பணத்தை இழந்ததால் மதுரை செல்ல பணத்திற்காக கஷ்டப்படுகிறான் குணசேகரன்.)

வியா: வாங்காயோ... நிம்மிள்க்கி என்ன வேணும்? சொல்லுங்கோயா?

குண: அய்யா! எனக்கு ஒண்ணும் வேண்டாம்! இந்த பேண்டை விலைக்கு எடுத்துக்கிட்றீங்களா?

வியா: ரொம்பவும் குட்றுண இருக்காங்க! எட்டு அணு தர்றுங்க.

குண: புதுசய்யா! ஐம்பது ரூபாய் போட்டு தைச்சேன். மதுரைக்குப் போகணும்.- ரயில் சார்ஜ்க்காவது...கொடுங்கய்யா...

வியா: நிம்மிள் பம்பாய் போறுன்—மதருஸ் போறுன்... நம்மிள்க்கி என்னுய்யா...எட்டணு தர்ரான்...

(குணசேகரன் நகருகிறுன்.)

குண: அய்யா! கப்பல்லே வந்தேன்—பணம், பெட்டி எல்லாம் திருட்டுபோயிடுச்சி மதுரைக்குப் போகணும். ஏதாவது...

வீட்டுகாரர்: பணம், பெட்டி யெல்லாம் திருட்டு போயிட்டா போயி போலீஸ் ஸ்டேஷன்லே போயி ரிப்போர்ட் பண்ணு.

(இரவுநேரம். குணசேகரன் ஒரு திண்ணையில் தூங்கிக் கொண்டிருக்கிறுன். வீட்டுக்காரன் தண்ணீரை கொண்டு வந்து ஊற்றுகிறுன் குணசேகரன்மீது)

வீட்டு: ஏண்டா அயோக்கியப் பயலே! யாரைக் கேட்றா இங்கே வந்து படுத்தே?

குண: அய்யா...இன்னும் கொஞ்சம் தண்ணி இருந்தா கொண்டு வந்து ஊத்துங்க: குளிச்சி ரொம்ப நாளாகுது. கொஞ்சம் சோப்பு இருக்குங்களா?

வீட்டு: அட திருட்டுப்பயலே...

குண: அம்மா...லட்சுமி மாதிரி இருக்கீங்க! ஒங்க தம்பியாக இருந்தால் இப்படி பார்த்துக்கிட்டு இருப்பீங்களா?

பெண்: தம்பி முறையில்லே கொண்டாட வந்துட்டான் தடியன்!

வீட்டு: இன்னும் கொஞ்சம் கழிச்சா உள்வீட்டு முறையும் கொண்டாட ஆரம்பிச்சுடுவான் நீபோயிரு உள்ளே. பெண் உள்ளே போகிறுள். குணசேகரனைப் பார்த்து) போடா! போடான்ஞ......

(குணசேகரன் போய் ஒரு பிளாட்பாரத்தில் படுத்து தூங்கிக் கொண்டிருக்கிறுன்.)

போலீஸ்: டேய்...டேய்...சோமாறி எழுந்திரு.

குண: (தூக்கம்)

போலீஸ்: டேய் சோமாரி! பிக்பாக்கட் அடிச்சிட்டு வந்து தானே படுத்திருக்கே? என்னடா முழிக்கிறே?

குண: தூங்குறவனை எழுப்பினுல் முழிக்காமல் வேற என்ன பண்ணுவான்?

போலீஸ்: டேய்! நீ பிக்பாக்கட் தானே?

குண: இல்லே...யெம்டி பாக்கெட்.

போலீஸ்: பின்னே என்டா இங்கே வந்து படுத்தே?

குண: இங்க கூட படுக்கக் கூடாதா? மாடு செய்த புண்ணியம் கூட இந்த மனிதன் செய்யலையா? ஆமா மதராஸிலே மனுஷன் மிருகமாத்தான் இருக்கான்.

போலீஸ்: யாரடா சொல்றே?

குண: ஒங்களைச் சொல்லலீங்க! முதுகெலும் பொடிய மூட்டை வண்டி இழுத்து—நரம்பு தெறிக்க குதிரைக்குப் பதில் ரிக்ஷா இழுத்து கூனிப் போயிருக்கிறானே—அவனை, அந்த நல்லவன், நடை பாலதயில் தூங்குபவன், நாதியற்றவன், நாலு கால் மிருகத்தைப் போல் உழைக்கிறானே அவனை சொன்னேன் சென்னை புனிதமான நகரம்! இங்கே மனுஷன் மிருகம்.

போலீஸ்: நீ மெட்ராசுக்கு மேயரா வர்ற காலத்திலே மிருகத்தையெல்லாம் மனுஷனுக்கு.

குண: என்...இப்பவே...எத்தனையோ மிருகங்கள் மனித உருவத்தில் இல்லையா?

(என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகருகிறான்.)

குண: (குழாயைப் பார்த்தும்...) ஆஹா...கடவுள் தண்ணீரை யாவது காட்டினாரே... (தண்ணீர் விழவில்லை) பராசக்தி! உன் மகனின் கதியைப் பார்! அவனுக்கு உண்ண உணவு இல்லை! உடுத்த மாற்றுத் துணி இல்லை! உறங்க ஒரு இடம் இல்லை! பராசக்தி......

காட்சி—14

(மதுரையில் இட்லிக்கடை வைத்து பிழைப்பு நடத்தும் கல்யாணி வீட்டில் ஓர் நாள்...)

சாப்பிடுபவர்: இன்னியோட மூணுரூபாய் ஆச்சி! நாளைக்குத் தர்றேன்.

வியா: ஏ...கல்யாணியம்மா! கல்யாணியம்மா! கொடுக்க வழி இல்லேன்னு எம்மா கடன் வாங்குறே?

கல்: இன்னும் ரெண்டுநாள் பொறுத்துக்கங்க, வாடிக்கைகாரங்க பணம் கொடுத்தவுடனே தர்றேன்.

வியா: அதெல்லாம் முடியாதம்மா! (இந்நேரம் வேணு வருதல்.)

வேணு: ஓய்! யாருங்காணும்? தனியாக இருக்கிற பொண்ணு கிட்டே வந்து தகராறு பண்றது? பெரிய மனுஷன் நிக்கிறது கண்ணு தெரியலே?

வியா: மாத்ரோஜ் மகராஜ்!

வேணு: மாத்ரோஜ்...மண்ணுங்கட்டி ரோஜ்.......எவ்வளவுங் காணும் தாணும்?

வியா: பத்து ரூபாய்.

வேணு: இந்தாங்காணும் (ரூபாயை எடுத்து கொடுக்கிறான்)

கல்: அண்ணு! நீங்க கொடுக்க வேண்டாம்.

வேணு: பரவாயில்லே! போயி இட்லி கொண்டுவா (கல்யாணி இட்லி கொண்டுவரப் போகிறாள்.)

மைனர்: தனியாக இருக்கிற பொண்ணுகிட்டே வந்து இப்படியா கலாட்டா பண்றது? வெட்கங் கெட்ட நாய்ங்க!

வேணு: என் கல்யாணி! இந்த மாதிரி தான் தெரியாதவன் இட்டே யெல்லாம் என் கடன் வாங்குறே?

கல்யாணி: என்ன செய்யுறது அண்ணு? வயிறு வளர்க் கணுமே......

வேணு: அப்படீன்னு நான் சொல்றபடி செய்–இப்ப நான் கொடுத்தேன் பாரு பத்துரூபாய் அதை ரூபாயாய்த் தாவேண்டாம்! தினம் காலையிலே ரெண்டு ஆளுக்கு இட்லி கொடுத்திரு! நான் இராத்திரியிலே பலகாரம் தான் சாப்பிட்றதுதான் வழக்கம் அதனாலே தினம் இராத்திரியிலே நாலு அணுவுக்கு கொடுத்திடு. இந்த பத்து ரூபாய் கழிந்தப்புறம் சொல்லு! அப்புறம் போகப்போக உன் நாணயத்தைப் பார்த்து வேண்டிய பணம் தர்றேன்.

மைனர்: ஆமப்பா! இந்த மாதிரி ஏழைகளுக்கு தானப்பா உதவி செய்யணும்.

காட்சி—15

(சென்னையில் பசியால் துடித்து பைத்தியம் போல் ஒரு பிளாட்பாரத்தில் குணசேகரன் இருக்கிறான் அப்போது...)

பழக்காரி: பழம்...பழம்...ஆரஞ்சு...ஆப்பிள் பழம்...எம்பா... பழம் வேணுமா?

குண: ்வேண்டாம்! காசு இல்லே!

பழக்காரி: காசு இல்லையா? அப்படீன்னு இதைப் பாத்துக் கோ! போயி தண்ணி குடிச்சிட்டு வர்றேன்.

(பழக்கூடையை வைத்து விட்டு போகிறாள். குணசேகரன் பழக்காரியை கேளாமலே பழத்தை எடுத்து தின்னுகிறான்.)

பழக்காரி: டேய்! டேய்...... ஏண்டா என் பழத்தை எடுத்தே?

குண: பசிக்குதம்மா...

பழக்: பசிக்குதா? பாழாய்ப் போனவனே... நான் பாடுபட்டு பங்கப்பட்டு நாலு தெரு சுத்தி நாலு காசு சம்பாதிக்க அதைத் திங்க வந்துட்டியேடா!

குண: உன் மகனாக இருந்தால் மன்னிக்கமாட்டியா?

பழக்: உன்னை தெய்வம் தாண்டா கேட்கணும்!

குண: அவன் கேட்கலையம்மா என் வேதனைக் குரலை! அவன் மனசுதான் கல்லாய் போச்சே!

பழக்: என் பழம் எல்லாம் மண்ணாப் போச்சே! உனக்கு எந்த மாரியம்மன் கோவில் மண்ணை வாரி இறைப்பேன்? டேய்! மரியாதையா பணத்தை எடுத்து வைக்கல்லே பல்லை உடைச்சிடு வேன்.

குண: பணத்துக்கு எங்கம்மா போவேன்? வேணும்னு கூலி இல்லாமல் இந்தக் கூடையை தூக்கி பழத்தை பூராவும் வித்து தர்றேன்.

பழக்: வித்தா தர்றே? வீணாப் போனவனே! மூஞ்சை பாரு! அட! பழத்தை தின்னுட்டு தோலை உரிச்சி இதிலேயா போட்டிருக்கே? தூக்கு! அடதூக்குண்ணு!

(இந்நேரம் ஒரு பைத்தியக்காரன் வந்து பழக்கூடையை தட்டிவிட்டு—பழத்தை எடுத்து விடுகிறான். போலீஸ் அவனை விரட்டுகிறது ஆனால் அவனோ போலீசை மிரட்டி விட்டுச் செல் கிறான். இக்காட்சியைக் கண்ட குணசேகரன்...)

குண: பைத்தியக்கார உலகம்! இந்த உலகத்தில் ஏமாற்றித் திரிபவன்தான் பிழைக்க முடியும்! நான் திருடியது வேட்டி வாங்கிக் கொள்வதற்கா? அல்லது வீடுகட்டி கொள்வதற்கா? வயிற்றுப்பசிதாங்க மாட்டாமல் ஒரு பழம் திருடினேன்—அதற்குப் பரிசு அடி, உதை, திட்டு. பைத்தியக்காரன் ஒரு சீப்பு பழத்தை திருடுகிறான். உலகம் அவனுக்கு பயப்படுகிறது. அவனை மன்னித்து விடுகிறது. இனி நாமும் வேறு வழியை கையாண்டால்தான் பிழைக்க முடியும்.

(இந்நேரம் ரோட்டிலே ஒரு பெண் செல்லுகிறாள். இரு மைனர்கள் அவள் செல்லும் அழகை பார்த்து...)

மைனர்: அவள் நடையே தனி அழகு சார்! இந்த மாதிரி உருப்படி நமக்கு கிடைக்கணுமே!

வந்தவன்: எல்லாம் பணம் போட்டால் கிடைக்கும் சார்...

(குணசேகரன் மைனர்களை அடித்து...)

குண: சிகரெட்... (மைனர்கள் கொடுத்து விடுகின்றனர்) ஹ...ஹ...ஸக்ஸஸ் இன்றுமுதல் நானும் ஒரு ஏமாற்றுக்காரன்!

(பைத்தியக்காரன் மூலம் ஏமாற்றுக்காரனே பிழைக்க முடியும் என்ற பாடம் பயின்ற குணசேகரன் தானும் ஓர் பைத்தியம் போல் நடித்து ஆடி பாடி பலரிடம் பணம் பறிக்கிறான்...)

தேசம் ஞானம், கல்வி, ஈசன் பூசையெல்லாம்
காசு முன் செல்லாதடி—குதம்பாய்
காசு முன் செல்லாதடி
ஈசனும் ஈசனர் பூசையும் தேசத்தில்
காசுக்குப் பின்னாலே—குதம்பாய்
காசுக்குப் பின்னாலே
காட்சியான பணம் கைவிட்டுப் போனபின்
சாட்சி கோர்ட்டு ஏறுதடி—குதம்பாய்
சாட்சி கோர்ட்டு ஏறுதடி
பை பையாய் பொன் கொண்டோர்
பொய் பொய்யாய் சொன்னாலும்
மெய் மெய்யாய் போகுமடி—குதம்பாய்
மெய் மெய்யாய் போகுமடி
நல்லவரானாலும் இல்லாதாரை
நாடு மதிக்காது—குதம்பாய் நாடு மதிக்காது
கல்வி இல்லாத மூடரைக் கற்றோர் கொண்டாடுதல்
வெள்ளிப்பணமடியே—குதம்பாய்
வெள்ளிப் பணமடியே
ஆரியக் கூத்தாடினாலும், தாண்டவக்கோனே—காசுக்
காரியத்தில் கண்வையடா, தாண்டவக்கோனே
உள்ளே பகைவையடா, தாண்டவக்கோனே—காசுக்கு
உதட்டில் உறவாடடா, தாண்டவக்கோனே
முட்டாப்பயலையெல்லாம் தாண்டவக்கோனே—சில
முட்டாப்பயலையெல்லாம் தாண்டவக்கோனே—காசு
முதலாளியாக்குதடா, தாண்டவக்கோனே
கட்டி அழும்போதும், தாண்டவக்கோனே—பிணத்தைக்
கட்டி அழும்போதும், தாண்டவக்கோனே—பணப்
பெட்டிமேலே கண்வையடா, தாண்டவக்கோனே

காட்சி—16

(மதுரையில்)

[குணசேகரன் பைத்தியக்காரனைப் போல் நடித்து மதராவி விருந்து மதுரையில் தன் வீட்டு அருகே வந்து சேருகிறான். அவ் வீடு பூட்டியிருப்பதால் பக்கத்தில் பிச்சை போட்டுக்கொண்டு நின்ற பார்வதியை விசாரிக்கிறான்.]

பார்வதி: அடா! நீ வேறய்யா! இரு வர்றேன்.

குண: இல்லேமா! நான் பிச்சைக்காரனில்லை. பக்கத்து வீட்டிலே மாணிக்கம்பிள்ளையின்னு ஒருத்தர் இருந்தாரே—இப்ப அவரு எங்கம்மா இருக்காரு?

பார்வதி: யாரு? கல்யாணி அவுங்க அப்பாதானே?

குண: ஆமாம்மா!

பார்வதி: அவரு செத்துப் போயிட்டாரு.

குண: ஆ......செத்துப் போயிட்டாரா? அப்ப அவரு பொண்ணு கல்யாணி?

பார்வதி: கல்யாணி! எனக்கும் பொண்ணு மாதிரிதான்! கடைஞ் செடுத்து சிலு சிலுத்து இருப்பாள்! கல்யாணம் எல்லாம் நல்லாத்தான் நடந்திச்சி! பாழும் தெய்வம் அவளையும் வாழ விடல்லே......கல்யாணம் நடந்த மறு வருஷமே அவளை சிசுவும் கையுமா விதவையாக்கிருச்சி!

குண: ஆ......அய்யய்யோ...இப்ப கல்யாணி எங்கேம்மா?

பார்வதி: அதோ அந்த தெருக்கோடியிலே இட்லி கடை வைச்சிருக்கு. இப்படி துயரப்பட்றியே! நீ யாரு?

குண: நான் யாருன்னு சொன்னால் உங்களுக்குத் தெரியாதம்மா!

[கல்யாணியைத் தேடி தெருக்கோடி வீட்டுக்கு விரைந்து செல்லுகிறான் குணசேகரன்.]

காட்சி—17

[கல்யாணி தன் குழந்தையை தொட்டியில் போட்டு பாடிக் கொண்டிருக்கிறாள். இதைப் பார்த்துக் கொண்டே கண்கள் கடலாக, நெஞ்சை துளைக்கும் சோகத்தோடு நிற்கிறான் குணசேகரன்.]

கொஞ்சும் மொழி சொல்லும் கிளியே!—செழும்
கோமளத் தாமரைப் பூவே!—ஒரு
வஞ்சமில்லா முழுமதியே—இன்ப
வானில் உதித்த நல்லமுதே!
கண்ணே, கண்மணியே, கண்ணுறங்காயோ!
மாமன்மார் மூவர் தம்பி—நல்ல
வாழ்வளிக்க வருவார் [மாமன்]
உன் மாம்பழக் கன்னத்திலே—முத்த
மாரிபொழிந்திட வருவார்
கண்ணே கண்மணியே, கண்ணுறங்காயோ
மாணிக்கப் பாலாடை—பச்சை
மாமணித் தொட்டிலுடன்—வெள்ளை
யானையும் வாகனமாய்
மாமன் தருவார் சீதனமாய்—(சின்ன) [மாமன்]
கண்ணே கண்மணியே, கண்ணுறங்காயோ!
வெள்ளியினால் செய்த ஏட்டில்—நல்ல
வைர எழுத்தாணி கொண்டு
தெள்ளு தமிழ்ப் படம் எழுத—உன்னை
பள்ளியில் சேர்த்திட வருவார்—மாமன்
அள்ளியணைத்திட வருவார்
கண்ணே கண்மணியே, கண்ணுறங்காயோ!

[பாடலின் கருத்து அவன் வருத்தத்தை பன்மடங்கு வளர்க்கவே......]

"ஆமாம்! மாமன்மார்கள் இப்படி ஆடம்பரமாக வருவார்கள் ......கல்யாணி! உன் ஆசைக் கனவை நான் அழிக்க வேண்டாம்! என்னை இந்த பைத்தியக்கார வேஷத்தில் நீ என்னை கண்டு கொள்ளவே வேண்டாம்'' இது குணசேகரனின் மனச் சாட்சி.

குண: கடலிலே திசை மாறிப்போன கப்பல் அப்படியே கவிழ்ந்துவிடக் கூடாதா? கல்யாணி! இந்த பைத்தியக்கார கோலத்துடன் என் கல்யாணியைக் கண்டு அவள் வேதனையை இன்னும் அதிகப்படுத்த வேண்டாம். சுமைதாங்கி! இனி இதுவே என் சோகம் தாங்கி! இதுவே என் வீடு! இங்கேயே என் வாழ்வு! கல்யாணியை தினந்தோறும் பின் தொடர்ந்து கொண்டிருப்பது தான் என் உத்தியோகம்.

காட்சி—18

(மைனர்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.)

1-வது: திருப்பப்பா......

2-வது: மூணு ராஜா தம்பீ......

1-வது: எனக்கு மட்டும் மூணு ஆஸ் இருந்தால்...

வேணு: ஒரு லாண்ட்றியே வைச்சிருவே.

1-வது: என்னப்பா சிரிக்கிறீங்க? நான் ஆட்டத்துக்கு வரல்லே.

வேணு: ஏது...ஆள் அவுட்டா...சும்மா கெட்டப்பா! போன காசை எல்லாம் திருப்பிடலாம்.

1-வது: எண்ட்டா அதற்குக்கூட ஒரு பைசா இல்லையே... எய்...நீ வைச்சிருந்தால் கொடுக்க மாட்டியா? எய்...ஒரு டேபிள் மட்டும் கொடுப்பா.

வேணு! என்னப்பா......இரும்புப் பெட்டிச் சாவியையே ஒங்க அப்பா ஒன்ட்ட கொடுத்திருக்காரு. பயப்பட்றியே...

1-வது: சாவிதானே...எனக்கு அடிக்கடி காக்கா வலிப்பு வர்றது வழக்கம். அதனாலே கொடுத்திருக்காரு.

வேணு: ஏய்......அங்கே வர்றியா போவோம்...

1-வது: எங்கே?

[மைனர் வேணுவால் அழைத்துச் செல்லப்படுகிறான்.]

காட்சி—19

[பைத்தியம்போல் வேண்டுமென்றே பிதற்றிக் கொண்டிருக்கிறான் குணசேகரன்...]

குண: கல்லைத்தான்—மண்ணைத்தான்...காய்ச்சிதான்...... குடிக்கத்தான்...கற்பித்தானா? (சிரிக்கிறான்) நானே மகாராஜா இதில் சந்தேகமில்லை. யாரவர்கள்? மந்திரி பிரதானிகளே! வருக! வருக!! இவ் ஆசனத்தில் அமருங்கள்! பரத நாட்டியம் ஆரம்பமாகட்டும்! டும்! டும்! டும்.

கோபாலனோடு நான் ஆடுவேனே—நந்த
கோபாலனோடு நான் ஆடுவேனே—வேணு
கோபாலன்—ஆ! நந்த கோபாலன்—ஆ!

போதும்! போதும்!! தேச விசாரணை ஆரம்பமாகட்டும்! டும்! டும்! டும்! மந்திரி—நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகின்றதா?

அதுக்குத்தான் வருண பகவானுக்கு கடகடகட்டு எட்டு தந்தி அடிச்சிருக்கோம் மகராஜ்!

சபாஷ்! சபாஷ்!

யார் அவர்கள்? என் கத்துகிறுர்கள்? ஓய்...? ஓய்...?

மகாராஜா......வயிறு பசி தாங்கலே......குடும்பம் குடும்பமா சாவுருேம்.

வாட்! பசிக்குதா? அப்படி...சொல்லாதே பாவி!

பணம் இல்லேயே மகராஜ்!

பணம் இல்லேயா? வேறே வாட் யு வான்ட்? பவுன் விளையுற நாடுடா... பரதேசிப் பசங்களா? சாவுறீங்களா? சாவுங்க......சந்தோஷமாகச் சாவுங்க......அப்பத்தாண்டா வால் நட்சத்திரம் முளேக்கும். சர்...

அதுக்கும் பணம் இல்லேயே...

பணமில்லேயா? வடமலேயானுக்கு காவுடி எடுங்கடா...

[ஒரு செங்கலே எடுத்தல்]

கோவிந்தா! ஹரே! கோவிந்தா!

(கல்லே சுமைதாங்கி மீது வைத்துக்கொண்டு]

நட்ட கல்லே தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து மொண மொணன்னு சொல்லும் மந்திரம் ஏதடா!
நட்ட கல்லும் பேசுமோ...நாதனுள் இருக்கையில்—சுட்ட
சட்டி சட்டுவம்...கறிச் சுவை அறியுமோ?

பஜனே செய்வோம்—கண்ணன் நாமம்
பஜனே செய்வோம் கண்ணன் நாமம்—பட்டினிகிடந்து
பஜனே செய்வோம் கண்ணன் நாமம்

[இவ்வாருக பைத்தியக்காரனேப்போல் பல வேஷத்தில் பல பேச்சுக்களேப் பேசும் குணசேகரனேக் கண்ட கல்யாணி......]

கல்யாணி: அய்யோ...பாவம்...யாரோ பைத்தியம்...போல் இருக்கு.

குண: தங்கச்சி! இங்கே வாயேன்!

கல்யாணி: என்ன? அப்ப நான் உனக்கு தங்கச்சியா?

குண: நான் உன்கிட்ட ரெண்டு மூணு நாளா சொல்லணும்னு நினேச்சேன்.

கல்யாணி: என்ன?

குண: ஒண்ணுமில்லே! நான் ஒரு பெண்ணு பெத்துத் தர்றேன்! உன் பையனுக்கு கட்டிக்கிட்றியா?

கல்யாணி: அதுசரி! சீதனம்?

குண: அது அப்புறம் பார்த்துக்கிடலாம். முதல்லே என் மாப்பிள்ளையை கொஞ்சம் கொடு...ஒரு முத்தம் கொடுத்துட்டு தர்றேன்.

கல்யாணி: அய்யோ...நான் மாட்டேன்!

குண: தங்கச்சி ஒண்ணே ஒண்ணு! தரமாட்டியா? சத்திய மாகச் சொல்லுகிறேன்...நான் பைத்தியக்காரன்னு நினைச்சியா? தங்கச்சி சத்தியமா உன் பிள்ளையை ஒண்ணும் செய்யலே... கொடுக்கமாட்டியா? ஆம்! நான் பைத்தியக்கரரன்தான்.

[தாளா துயரத்தோடு சென்று விடுகிறான்]

காட்சி—20

இடம்: ரோடு.

வியாபாரி: வடை! முறுக்கு! அய்யா! முறுக்கு வேணுமா? சூடான முறுக்கு! ஒண்ணு வாங்கி சாப்பிட்டால் ஒடம்பெல்லாம் சுருக்குன்னு இருக்கும். வேணுமா?

குண: மூணு அணவுக்கு கொடு!

வியாபாரி: அட கடவுளே! மூணு அணான்று சொல்லி மூணுநாள் ஆகுது! எது எதய்யா வைக்க?

குண: அட...ரெண்டு அணவுக்கு இதும், ஓரணவுக்கு அதும் கொடப்பா!

(கொடுக்கிறான்.)

வியாபாரி: எம்பா! உன் கை நல்லா நடக்கும்லே?

குண: (கைநடக்காது—கால் நடக்கும் என்று செய்கைமூலம் காட்டுதல்)

வியாபாரி: அய்யோ...பாவம்...பசி அதிகம்போ லிருக்கு! சாப்பிடு! சாப்பிடு!!

அடுத்தவா: ஏ...முறுக்கு...

வியாபாரி: இருங்க, அய்யாகிட்டே காசவாங்கிட்டு வர்றேன். காசு எடப்பா...ஹும்...காசு எடு...

குண: (சிரித்தல்)

வியாபாரி: என்னப்பா சிரிக்கிறே?

குண: (சிரித்தல்)

வியாபாரி: அட! என்னப்பா மறுபடியும் சிரிக்கிறே? காசை எடு. நாலு தெருவுக்கு நான் போகணும்.

குண: என் பொறுக்கவா?

வியாபாரி: காசு எடுன்னு......

குண: காசா? உனக்கா? எதுக்கு?

வியாபாரி: எம்பா! மாமா மச்சான் மாதிரி விளையாடுறே. என்னே ஏமாத்தலாம் என்று நினேச்சே.

குண: இல்ல! இன்னும் ரெண்டணுவுக்கு கொடு.

வியாபாரி: அப்படி வா வழிக்கு!

(கொடுக்கிறுன், சாப்பிடுகிறுன்)

காசு எடுப்பா! ம்! நேரமாகுது!

குண: (பைத்தியம்போல்) அடடா பயலே......

(என்று வியாபாரியை விரட்டிவிட்டு பெட்டியை தான் தூக்கிக்கொண்டு புறப்படுகிறுன்.)

முதலாளி! முறுக்கு வேணுமா?

முதலாளி: சூடா இருக்கா?

குண: ரெண்டும் இருக்கு.

முதலாளி: அப்ப எறக்கு. இதிலே ஒரணுவுக்கு, அதிலே ஒரணுவுக்கு கொடு.

குண: காசை எடு.

முதலாளி: அட, முதல்லே கொடப்பா.

குண: எங்க! ஒங்களுக்கு ரெண்டு அணுவுக்கு போதுமா?

முதலாளி: போதும்! காசை ரொம்ப செலவழிக்கக் கூடாது. எம்பா! ரெண்டு அணுவுக்கு வாங்கி இருக்கேனே! கொஞ்சம் ஓசி!

குண: அய்யோ! இதிலேகூட ஒங்க பிச்சைக்கார புத்தி போகலேயா! இந்தா ஓசி!

குண: (கொடுக்கிறுன்) காசை எடு!

முதலாளி: காசா? ரூபாய்க்கு சில்லரை இருக்கா?

குண: என்ன?

முதலாளி: ஒரு ரூபாய்க்கு சில்லரை இருக்கா?

குண: இல்லரையா? எங்கிட்டையா? அட கொடு.

(ரூபாயை வாங்கி கையில் வைத்துக்கொண்டு)

நல்ல சமயமடா! இதை நழுவவிடுவாயோ......

ஏதுங்காணும் இந்தக் காசு?

முதலாளி: ஏதுங்காணும் இந்தக் காசா?

குண: டேய் "யெயிட்நாட் த்ரீ!" கொண்டு போடா இந்த கொட்டாப்புளியை.

(ரூபாயுடன் ஓடிவிடுகிருன்)

(வியாபாரி வந்து பெட்டியை தூக்குதல்—முதலாளி தூக்க விட மறுத்தல். வியாபாரி பெட்டியை தூக்கி முதலாளியின் தலையின் மீது வைத்தவுடன் போலீஸ் வந்து பிடித்துக் கொண்டு போதல்)

காட்சி 21

(காமவெறி பிடித்த கருநாகம் வேணு கல்யாணி என்ற கனியைச் சுவைக்கும் நோக்கத்தோடு கல்யாணியின் வீட்டுக் கதவை தட்டுகிருன்)

வேணு: கல்யாணி!

(கதவைத் திறந்தவுடன்

கல்யாணி: என்ணு இவ்வளவு நாழி!. இனிமேல் சீக்கிரமா வந்திடுங்க.

வேணு: வரவேண்டிய நேரத்திலேதானே வந்திருக்கிறேன்! என் கல்யாணி! இன்னிக்கு வியாபாரம் எப்படி?

கல்யாணி: என்றைக்கும் போலதான் இன்னிக்கும்.

வேணு: ஹூம்...இட்லி இருக்குலே?

கல்யாணி: இருக்கண்ணு!

வேணு: போயி கொண்டு வா.

(இட்லி கொண்டு வருகிருள்.)

என் கல்யாணி! அரிசி கிடைக்காத நேரத்திலே இப்படி தனி அரிசியாப் போடாமல் கொஞ்சம் கோதுமையை சேர்த்தால்.......

கல்யாணி: சேர்க்கலாம்! ஆனு...ருசி கெட்டுடும்.

வேணு: கோதுமையும் கலந்துக்கிட்டால் லாபமும் அதிகம் இருக்குமே!

கல்: லாபத்துக்காக அக்கிரமம் செய்யலாமா அண்ணு?

வேணு: என்னடி? மூச்சுக்கு முப்பத்திரண்டு அண்ணு போட்றே?

கல்: அண்ணு! எனக்கு மூன்று அண்ணன்மார்கள் உண்டு! அவர்களில் ஒருவரைக்கூட பார்க்க கொடுத்து வைக்காத பாவியானேன்! ஆசைக்கு உங்களையாவது அண்ணு அண்ணுன்னு கூப்பிட்றேன்.

வேணு: ஆசையைக் காட்டிக் கொள்ளும் வழி இதுவல்ல கல்யாணி!

கல்: அண்ணு! தனியாக இருக்கும் பெண்ணிடம் இப்படி பேசுவது......

வேணு: நீ படர்வதுக் கேற்ற பலாமரமாக நான் இருக்கிறேன்! மாமான்னு கூப்பிடு! அது எவ்வளவு மனோகரமாக இருக்கும்! அத்தான்னு கூப்பிடு! அது எத்தனை சத்தான மொழி!

கல்: நெருங்காதே! இனி என்னால் பொறுக்க முடியாது?

வேணு: நானும் அப்படிதான் நீ சரீன்னு சொல்லு...ஓலைக் குடிசை இருக்கும் இடத்திலே - உப்பரிகை கட்டித் தருகிறேன். கந்தல் பாயிலே ப்டுத்த கல்யாணி கனகமணிக் கட்டிலில் படுப்பாள்!

கல்யாணி: என்னைத் தொடமுயன்றால் சப்தம் போடுவேன்.

வேணு: போடு! உன் சப்தம் எனக்கு சங்கீதமாக இருக்கட்டும்.

கல்யாணி: இப்படி எத்தனை பேர் கிளம்பி இருக்கிறீர்கள்? வறுமையால் வாடும் பெண்கள் வஞ்சக வலையில் விழுவார்கள் என்று இப்படி எத்தனை பேர் கிளம்பி இருக்கிறீர்கள்?

வேணு: கத்து! நன்றாக கத்து! போர்க்களத்திலே ஒப்பாரி! போதையிலே புலம்பல்! கூடாதடி என் கோமளமே!

(என்று கல்யாணியை கட்டி அணைத்து அவள் செவ்விதழைச் சுவைக்கப் போகிறான் காம வெறியன் கயவன் வேணு. இந்நேரம் குணசேகரன் வந்து வேணுவை விரட்டி யடிக்கிறான்.)

கல்: நீ வரலீன்னு என் கதி என்ன ஆகி இருக்கும்? கிறுக்கண்ணு! நீ எங்கே இங்கு வந்தே?

குணு: ஒன்னே பார்க்கத்தான்!

கல்: கிறுக்கண்ணு! பத்துநாளா அந்த மரத்தடியிலே என்ன செய்யுறே?

குண: ராஜாங்கம் நடத்துகிறேன்!

கல்யாணி: கிருக்கண்ணு! இட்லி தர்றேன்! திங்கிறியா?

குண: ஹீம்...நீ காசு கேட்பியே!

கல்யாணி: காசு வேண்டாம்!

குண: நான் யாருன்னு சொன்னு நீ காசே கேட்கமாட்டே!

கல்யாணி: நீ யாரு?

குண: நானு...மரத்தடி மகாராஜா!

கல்யாணி: இட்லி கொண்டு வர்றேன்.

குண: வேண்டாம்.....வேண்டாமம்மா....இட்லி வேண்டா மம்மா...சட்னி...வேண்டுமம்மா...

கல்யாணி: சரி! ரெண்டும் கொண்டுவர்றேன். (போகிறாள்)

[குணசேகரன் பின்னால் சென்று தொட்டியில் தூங்கிக் கொண்டிருக்கும் தன் மாப்பிள்ளைக்கு முத்தமிடுகிறான். அவன் கண்களிலே கண்ணீர்......]

கல்யாணி: (இட்லியுடன் வந்து) என்......கிருக்கண்ணு அழறே?

குண: ஹீம்......என் ராஜாங்க பிரஜை எல்லாம் சந்தோஷ மாக இருக்காங்க—அதனாலே நான் அழறேன். (என்று தன் கையில் வைத்திருந்த ரூபாயை இட்லி தட்டில் போட்டுவிட்டு போய்விடுகிறான்.

கல்யாணி: கிறுக்கண்ணு! கிறுக்கண்ணு!!

காட்சி—22

[மறுநாள் காலை மைனர்கள் சிலர் கடையொன்றின் முன் நின்று அரட்டை அடிக்கின்றனர். அவர்களுக்கு அருகில் குண சேகரன் பல் துலக்கிக் கொண்டிருக்கிறான். அவ்வமயம்......]

1—வது: எங்கடா இராத்திரி யெல்லாம் ஆளையே காணோம்!

2—வது: இராத்திரி யெல்லாம் ஒரே சீட்டாட்டம்! கண் ணெல்லாம் எரியுது!

1—வது: அட கண்ணுதான் எரிஞ்சது! காசாவது! கிடைச் சதா? ஹீம்...அதுதானே இல்லை.

2—வது: எங்கடா வேணுவை? ஆளையே காணோம்?

1—வது: ஆள் மஞ்ச மெத்தையில் படுக்க போயிருச்சி! அதான் இட்லிகாரி கல்யாணி இல்லே! அவள் கிட்டே நம்ம பயல் வாலே ஆட்டி இருக்கான்—பாட்சா பலிக்கலே...நல்ல அடி உதை.

3—வது: அது எவன்டா அடிச்சது?

1—வது: டேய்! சும்மா இருடா! நீ வேறே! எண்டா! ஒடம்பை வீணு அலட்டிக்கிட்றே? எவனே பைத்தியக்கார வேஷத்திலே திரியுருனும்! கல்யாணிக்கு கள்ளப்புருஷனும்...

[இதைக் கேட்ட குணசேகரன் ஆத்திரத்துடன்]

குண: (மைனர்களை அடித்து) என்ன சொன்னே...என் கல்யாணிக்கா களங்கம்? கல்யாணி என் தங்கையடா என் தங்கை! இப்போதே போகிறேன்—நான் யார் என்பதை சொல்லி விடுகிறேன். (தங்கை வீட்டை நோக்கி வெறிகொண்டு ஓடுகிருன்)

காட்சி—23

[குடிசையில் கல்யாணியை காணுமல்......]

குண: சந்தர்ப்பம் என் தங்கையை விதவை யாக்கிற்று! சமுதாயம் அவளை வாழவிடவில்லை.

[கல்யாணியைக் காணுது திரும்புகிருன்] (வரும் வழியில்...)

அய்யா! இந்தப்பக்கம் ஒரு குழந்தையோட ஒரு பொண்ணு...

வழிப்: அட! அது உனக்கு தெரிஞ்ச பொண்ணுதானு? அதோ அந்த இடத்தில்தான் செத்துக் கிடக்காங்க.

குண: ஆ...கல்யாணி...... [அங்கே செத்துக் கிடக்கும் பெண் கல்யாணி அல்ல என்பதை அறிந்து திரும்புகிருன்.]

(கல்யாணி மதுரையில் இட்லி வியாபாரத்தை விட்டு ஊரை விட்டே வெளியேறுகிருள்.)

காட்சி—24

[இரங்கூனிலிருந்து வெளியேறியே சந்திரசேகர் திருச்சியில் எம். வி. சேகர் என்ற பெயருடன் வக்கீல் தொழில் நடத்தி வருகிருர்.]

வந்தவர்: ஏதாவது தகவல் கிடைத்ததா?

ஒருவன்: ஒரு தகவலும் கிடைக்கல்ல!

வந்தவர்: ஆமா! நீங்க இந்த ஊருக்கு வந்தது அவர்களுக்கு தெரியுமா?

சங்: தெரியாது......

சரஸ்வதி: எதற்கும் நாமே நேரிலேயே பார்த்து விட்டா...?

சங்: ஆமாம்! நாளைக்கே புறப்படுவோம்.

காட்சி—25

[கள்ள மார்கெட் கயவன் நாராயண பிள்ளை பதுக்கி வைத்திருப்பவற்றை கணக்கிடல்......]

நாராயணன்: சக்கரை மூடை......இருபது......மில் துணி பீஸ்......முப்பது......நூல் பேல்......ஆறு......ஆக மொத்தம்...

கருப்பன்:...அம்பத்தாறு.

நாரா: அது தெரியாது எங்களுக்கு! லாபத்தை கணக்குப் பண்ணினால்........

கருப்பன்: லாபம் என்ன......இப்பவே வித்தால் முப்பதாயிரம்......

நாரா: என்...அப்புறம் வித்தால் ஆகாதோ? இது ஒண்ணும் கத்திரிக்காய் இல்லே......அழுகிப் போறதுக்கு. கன்னிப் பொண்ணு......

காந்தா: கன்னிப் பெண்ணைக்கூட விக்க ஆரம்பிச்சிட்டீங்களா?

கருப்பன்: விக்கலாம். ஆனால், அதை இந்த மாதிரி மூட்டையா கட்டிப்போட முடியாதே.

நாரா: சும்மா இருடா மடையா!

காந்தா: என்...இவரு ப்ளாக் மார்க்கட்னு பூதத்தைக்கூட மூட்டையா கட்டிப்போட்ருவாரே.

நாரா: அப்படி கட்டிப் போடாமலா உன் கழுத்திலே தாலியை கட்டினேன்? நீ ப்ளாக் மார்க்கட்னு கேவலமாப் பேசுறே... அவ்வையார் கூழுக்குப் பாடினாள்...கம்பர் பொன்னுக்குப் பாடினாரு! இதுவும் ப்ளாக் மார்க்கட் இல்லாமல் வேறு என்ன?

[இங்கோரம் தமிழ் பண்டிதர் வருதல்]

நாரா: என்ன தமிழ் பண்டிதரே!

சி. ஐ. டி. நாராயண பிள்ளைவாள்! நான் இப்போது தமிழ் பண்டிதர் அல்ல! துப்பறியும் இலாகாவில் பணியாற்றுகிறேன். உங்களிடம் நூல் இருக்கிறதாக கேள்விப்பட்டேன்.

நாரா: அரகரா...அது யாருங்க சொன்னது என்ட்டா நூல் இருக்கிறதாக நான் ஒரு நாணயமான வியாபாரி! ஊருக்கு பெரிய மனுஷன்! சன்மார்க்க சங்கத்துக்கு தலைவன்!

கருப்பன்: திருட்டுப் பயலுக...

நாரா: யாருடா திருட்டுப்பயலுக ?

கருப்பன்: முதலாளி! கிணற்றுக் கரையிலே நாலு அணு வைச்சிருந்தேன். எவனோ அடிச்சிட்டுப் போயிட்டான்.

நாரா: போடா மடையா!

சி. ஐ. டி: அமைதி!! ஹும்...நாராயண பிள்ளைவாள்! நான் குறிப்பிடுவது ஆடை செய்யும் நூல் அல்ல—அறிவு வாடை வீசும் நூல். புத்தகம்.

நாரா: புத்தகமா? சரிதான். சி. ஐ. டி. சார்! என்டா ஏராளமா புத்தகம் இருக்கு! டேய் கருப்பா! அய்யா கேக்குற புத்தகத்தையெல்லாம்போயி கடையிலே வாங்கிக்கொண்டு வந்து கொடு. தெரிஞ்சதா? அப்போ......புறப்படுங்க...நேரம் ஆகுது.

சி. ஐ. டி: நன்றி! வணக்கம்!

நாரா: சந்தோஷம்!

(இந்நேரம் மதுரையை விட்டு வெளியேறிய கல்யாணி திருச்சிக்கு வந்து—நாராயண பிள்ளையின் வாசலருகே பசியால் துடித்து நிற்கிருள்)

கல்: அய்யா! நானும், குழந்தையும் பட்டினி! ஏதாவது.....

நாரா: எம்மா! இந்த இளம் வயதிலேயே பிச்சை எடுக்க ஆரம்பிசசிட்டியே! நீ யாரு ?

கல்: நான் அனுதைய்யா! ஏதாவது ஒரு வீட்டு வேலை கிடைச்சாலும் போதும்.

நாரா: அப்போ..இங்கே வேலை பார்க்குறீயா ?

கல்: சரியய்யா!

நாரா: டேய் கருப்பா! உள்ளே கூட்டிக்கிட்டு வாடா!!

காட்சி 26

[மதுரையில் கல்யாணியைக் காணுமல் திருச்சி வந்து சேரும் குணசேகரன், ரெயில்வே ஸ்டேஷன் அருகில் இருக்கிருன். அவ் வமயம் ரெயிலில் வந்த விமலா என்ற பெண்ணின் சாமான்களை கூலிக்கு தூக்கி வருவதாக எடுத்துக்கொண்டு ஓடுகிருன். சிலர்

அவனைத் துரத்தவே பழத்தை மாத்திரம் கொண்டு ஓடுகிறான் தன் பசியின் கொடுமையை அகற்ற.]

[பழங்களை திருடிவந்தவன் விமலா வீட்டின் கொல்லைப்புற தோட்டத்தில் கிணற்றங் கரையில் அமர்ந்து, பழங்களை தின்று கொண்டே பாடுகிறான்.]

கா......கா......கா
ஆகாரம் உண்ண, எல்லோரும் ஒன்றாக,
அன்போடு ஓடிவாங்க, என்ற
அனுபவப் பொருள் விளங்க—காக்கை
அண்ணாவே நீங்கள் அழகான வாயால்
பண்ணாகப் பாடுறீங்க—கா கா என
ஒண்ணாகக் கூடுறீங்க—வாங்க [கா...கா...கா]

சாப்பாடு இல்லாமே தவிக்குதிங்க—ஜனம்
கூப்பாடு போட்டு மனம் குழறுதுங்க—உயிர்
காப்பாத்தக் கஞ்சி தண்ணி ஊத்துங்க, என்றால்
தாப்பாளைப் போடுறாங்க பாருங்க—அந்த
சண்டாளர் ஏங்கவே—தன்னலமும் நீங்கவே
தாரணி மீதிலே பாடுங்க ராகம் [கா...கா...கா]

எச்சிலை தன்னிலே எறியும் சோத்துக்கு
பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே
இளைத்தவன் வலுத்தவன் இனச் சண்டை பணச் சண்டை
எத்தனையோ இந்த நாட்டிலே
பட்சி சாதி நீங்க எங்க பகுத்தறிவாளரைப் பார்க்காதிங்க
பட்சமாயிருங்க பகிர்ந்துண்டு வாழுங்க
பழக்கத்தை மாத்தாதீங்க—எங்கே பாடுங்க [கா...கா...கா]

[விமலா பாடலின் கவர்ச்சியால் இழுக்கப்பட்டு, அங்கு வர, அவளைக் கண்ட குணசேகரன் பயந்து ஓடுகிறான்—அவளோ அவனுக்கு "புதுமையான பித்தன் என்ற பட்டம் சூட்டுகிறாள்.]

காட்சி 27

[சந்திரசேகர் வீட்டில்]

சேகர்: அப்பா இறந்தே போய்விட்டார்! கடைசியாக என் தங்கை இட்டிலி சுட்டு விற்க வேண்டியதாயிற்று. ஞானசேகரன் அன்று விழுந்ததை நினைக்கும்போது பயமாக இருக்கிறது.

வந்தவர்: அவுங்க போட்டோ இருக்கா?

சேகர்: இல்லை...ஆனா...குணசேகரன் போட்டோ இருக்கு.

காட்சி 28

[கள்ள மார்கெட்காரன் நாராயணம் பிள்ளை என்ற பசு போர்த்த புலி தன் சூழ்ச்சியான நய வஞ்சக நாடகத்தை ஆரம்பிக்கிறான்.]

காந்தா: ஏது இவ்வளவு புத்தகம்?

நாரா: எல்லாம் அந்த தமிழ் பண்டிதருக்குத்தான். அவன் நம்ம வீட்டிலே இருந்த கந்த புராணத்திலே இருந்து—ஸ்ரீ வள்ளி சினிமா பாட்டு புத்தகம் வரை படிச்சிட்டான்! இப்ப என்னென்னமோ வந்திருக்கு! பாண்டியன் பரிசில்...இலட்சிய வரலாறு... எல்லாம் அம்பது ரூபாய் ஆச்சி. ஹூம்...கல்யாணி...காந்தா... சொல்ல மறந்துட்டேனே...இன்னிக்கு ஒரு புது படம் ரிலீஸ் ஆகி இருக்கு. பெயரு...கிருஷ்ணலீலா...

காந்தா: வாங்களேன் செக்கண்ட் ஷோவுக்குப் போகலாம்!

நாரா: நான் ப்ர்த்துட்டேனே மாட்னி ஷோவே!

காந்தா: நாளைக்கு போகிறேன்.

நாரா: அட! வாயேன்! விஷயம் இல்லாமல் சொல்லமாட்டேன். அதிலே லவ் சீன்ஸ் ரொம்ப பிரமாதம் நான் பார்த்துட்டேன். நீ போயிட்டு வர்றியா?

காந்தா: சரி! நான் போய்ட்டு வர்றேன்.

நாரா: ஹூம்......போ......டேய்! கருப்பா! அம்மாகூட போய்ட்டு வாடா!

கருப்பன்: அப்ப நானும் அம்மாகூட போட்டுங்களா?

நாரா: அட...போடா மடையா!

(காந்தாவும், கருப்பனும் சினிமாவுக்குப் போய்விடுகின்றனர்)

அப்பாடா! தொலைஞ்சது சனியன்! அப்பனே! கல்யாணி விஷயத்திலே கொஞ்சம் கருணைகாட்டேன்! நீயார் யாருக்கோ என்னென்னமோ பண்றியாமே! கல்யாணி! கல்யாணி!!

கல்யாணி: ஏன் எஜமான்?

நாரா: காந்தா அவா பாட்டுக்கு சினிமாவுக்கு போயிட்டா! அந்தக் கண்ணாடியை கொஞ்சம் எடேன்! செக்கண் ஷோ—மண்ணுங்கட்டி! பன்னிரண்டு மணிக்குத்தான் வருவாள்! இனிமேல் எடுக்கிறதுக் கெல்லாம் உன்னைத்தான் கூப்பிடணும்! ஹூம்...... உனக்குப் படிக்கத் தெரியுமா?

கல்: தெரியும்.

நாரா: பேஷ்! பேஷ்! அப்படியாளு இந்த புத்தகங்களை எல்லாம் எடுத்துப் படி.

கல்: சரி, எசமான்...

நாரா: கல்யாணி! இதோ அழகின் சிரிப்பு...

கல்: ஆ! (திகைக்கிருள்)

நாரா: அப்படி ஒரு புத்தகம். யாரோ பாரதிதாசனும் விதவையைப்பற்றி சொல்லியிருக்கான் பாரு.

கோரிக்கை யற்று கிடக்குதண்ணே—இங்கு
வேரிற் பழுத்த பலா
விதவைக்கு கூட காதல் உண்டாம்

பாடாத தேனீக்கள்
பசியாத நல் வயிறு
உலவாத தென்றல்
பார்த்தது உண்டா!

கல்: சரி, எசமான்! எனக்கு தூக்கம் வருகிறது.

நாரா: எனக்கு வரலையே! கல்யாணி உனக்கு எதிர் பாராத முத்தம் வேணுமா?

கல்: ஆ! (திடுக்கிடுகிருன்)

நாரா: அப்படி ஒரு புத்தகம்! இந்த ரயில்லேயும் காரில்லேயும் போயிட்டு வந்தது உடம்பெல்லாம் வலிக்குது. கல்யாணி! ஒடம்பை கொஞ்சம் பிடிச்சி விட்றீயா?

கல்: (கண்ணீர் விடுகிருள்)

நாரா: பைத்தியம்! ஒண்ணும் வேண்டாம்மா! அந்த தலையணையை கொஞ்சம் எடேன்.

(எடுத்து வரும்போது கல்யாணியின் கையை காம வெறியால் பிடித்து இழுக்கிருர்.)

கல்: எஜமான்! ஒங்கதரத்துக்கு இது அழகல்ல, நீங்க பெரிய மனுஷர்!

நாரா: அதான் இப்படி நடக்குறேன். ஒரு பெரிய மனுஷன் நம்மேலே பிரியமாயிருக்குரான்னு நீ பெருமைப்பட வேண்டாம்.

கல்: நில்லுங்கள்! அப்படி நினைத்திருந்தால் நான் மாட மாளிகையிலே உலவியிருப்பேன்.

நாரா: இப்போதுதான் என்ன கெட்டாபோச்சு! கல்யாணி! ஒரு கண்ஜாடை! உன் விழியை அசைத்தால் போதும். பிறகு உன் காலடியில் சிரஞ்சீவி அடிமை!

கல்: சீ...காமப்பேயே...

நாரா: என் உப்பைத் தின்னுட்டு எண்ட்டையே மீற ஆரம்பிச்சிட்டியா?

கல்: உங்கள் உப்பு என் உழைப்புக்குத்தான் உடலுக்காக அல்ல. நான் உங்கள் வீட்டில் வேலை பார்க்கும் தொழிலாளி!

நாரா: பெரிய மனுஷர்களது அந்தப்புறத்திலே தொழிலாளி-முதலாளி என்ற பிரச்னைக்கே இடம் இல்லை.

கல்: என்னைத் தொட முயன்றால் என் பிணத்தைத்தான் பார்ப்பீர்கள்.

நாரா: அப்படியாவது சாவு! சுடுகாடுவரைக்கும் தொட்டுக் கிட்டாவது வர்றேன், கல்யாணி! நீதான் என் இன்ப எஜமானி...

(என்று கல்யாணியை கட்டி அணைக்கப்போகிறார்.)

கல்: அய்யோ...அம்மா... (காந்தா வந்து விடுதல்)

காந்தா: நல்லா இருக்கு...ஒங்கலட்சணம்... ஊருக்குப் பெரிய மனுஷன்! என்னை கிருஷ்ண லீலாவுக்கு அனுப்பிட்டு இங்கே நாராயண லீலாவா நடத்துறீங்க!

நாரா: சினிமாவுக்கு போனவ நீ எங்கடி இங்கே வந்தே?

கருப்பன்: அம்மா பாதியிலேயே வந்துட்டாங்க எஜமான்!

காந்தா: எனக்குத்தான் இந்த நாராயணம் பிள்ளை சங்கதி தெரியாதா? ஒம்மைப்பற்றித்தான் ஊரே சிரிக்குதே! அடுத்த வீட்டு, எதிர்த்த வீட்டு பொம்பளைகள் கூட வரப்பயபட்றாளே!

நாரா: அவுள்க எதுக்கடி இங்கே வர்றா?

காந்தா: ஆமா ஒங்க அக்கா தங்கச்சியை ஒருவன் இப்படி கையைப்பிடிச்சி இழுத்தால் நீங்க சும்மா இருப்பீங்களா?

நாரா: என் இஷ்டத்துக்கு நான் செய்யுறேன. நீ என்னடி என்னை கேட்குறது?

காந்தா: அப்போ நானும் என் இஷ்டத்துக்கு யாரையாவது ஆம்புளையை எனக்குப் பிடிச்சவரை கையைப் பிடிச்சி இழுத்திட்டு போகப் போறேன்.

நாரா: போயண்டி போ!

கருப்பன்: ஐயோ எசமான் இப்படி சொல்லிப்புட்டீங்க.

நாரா: போவடி...போவே

காந்தா: சீ மனுஷனைப் பாரு! கல்யாணி! நல்லா தாழ்பா போட்டுக்கோ! ஏதாவது நாய் கீய் வந்து நுழையும்

(கல்யாணி அவ்வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.)

காட்சி—29

(கோயிலுக்குச் சென்று நாராயணம் பிள்ளையும், கருப்பனும் வரும் வழியில்......)

பிச்சைக்காரன்: அய்யா! அந்த தேங்காய் மூடியிலேயாவது ஒண்ணு கொடுங்கய்யா!

கருப்பன்: (கொடுத்தல்)

நாரா: ஏண்டா திமிர் பிடிச்ச பயலே! தேங்காயை ஏண்டா கொடுத்தே?

கருப்பன்: கோவிலிலே பிரசங்கத்திலே சொன்னீங்களே ''தர்மம தலைகாக்கும்னு''

நாரா: கோவிலிலே உனக்கும் எனக்குமா சொன்னான்? பணம்டா! கொண்டா இங்கே! (தேங்காயை திருப்பி கேட்கிறார்.)

பிச்சை: ஏழைங்க எஜமான்!

நாரா: ஏழை...ஏழவு! (அடித்தல்) ஏ...நாயே! ஒனக்கு தேங்கா கேக்குதா? (இந்நேரம் குணசேகரன் வருகிறான்.) யாரப்பா நீ?

குண: உங்களை எங்கேயோ பார்த்தாப்புலே இருக்குல்லே!

நாரா: பார்த்திருப்பே! பார்த்திருப்பே!!

குண: நீங்க...நீங்க...

நாரா: ஜெனரல் மெர்ச்சண்ட் நாராயணம் பிள்ளை!

குண: நானு சேர்மய்யா...

நாரா: வேலைக்காரனா?

குண: ஆமா! ஆமா. .அவருகூட ஒங்க கிட்டே...

நாரா: சக்கரை வேணும்னா? அவருக்கு மூட்டை மூட்டையால்லே வேணும் சாயந்திரமா நம்ம வீட்டுப் பக்கமாவா... (இரகசியமாக)...தர்றேன்.

குண: ப்ளாக்லே தர்றீங்களா?

நாரா: அட! நீ என்னப்பா?

குண: அப்போ சாயந்திரமா வரட்டுங்களா...? ப்ளாக்லே தர்றீங்களா...?

நாரா: வா...வா...

குண: அப்போ...இப்போ நான் போகட்டுங்களா?

(நாராயணம் பிள்ளையை அடிக்கிறான்.)

நாரா: இது என்னடாப்பா?

குண: இது அடிடாப்பா! ஏ...நாயே! ஒனக்கு தேங்கா கேக்குதோ? ஏழைக்கு தேங்கா எதுக்கு? (மீண்டும் அடிக்கிறான்) கொண்டாடா இங்கே... ப்ளாக்லே தர்றீங்களா? இந்தா ப்ளாக்லே ஒண்ணு வாங்கிக்கோ!

நாரா: பராசக்தி! இன்னு பயந்தோட்ற பசங்க இன்னிக்கி அடிக்கிற அறிவுக்கு வந்துட்டானுங்க!

(நாராயணரை, குணசேகரன் காலால் உதைத்து கீழே தள்ளுகிறான்.)

காட்சி—30

(ஒரு ஆற்றில் கையைக் கழுவிக் கொண்டே குணசேகரன்...)

குண: கல்யாணி! நானுவது திருடி, ஏமாற்றி, மிரட்டி சாப்பிட்டு விடுகிறேன். நீயும் உன் குழந்தையும் பசிதீர்த்துக் கொள்ள என்ன பாடு படுகிறீர்களோ? (ஆற்றில் படகு நின்று இறங்கிய விமலா குணசேகரனைப் பிடித்துக் கொள்கிறாள்.) நான் திருடன் இல்லே!

விமலா: நானும் அப்படி நினைக்க வில்லை! உனக்கு வேண்டியதை நீ எடுத்துக் கொண்டு போனுய்! அதை என்னிடம் கேட்டாலே கொடுத்திருப்பேன்! வாங்கிக் கொண்டு நடந்தே போயிருக்கலாம்.

குண: எல்லோரையும் போலத்தான் நீயும் இருப்பேன்னு நினைச்சேன்!

விமலா: அதான் பகுத்தறிவாளரை பாக்காதீங்கன்னு பாடினியா?

குண: ஆம்! இரக்கமற்ற பகுத்தறிவாளரை பாக்காதீங்கன்னு பாடினேன்.

விமலா: ஆமா! புதிர் போட்றியே......நீ யாரு?

குண: நானென்ன இந்த ஊர் கலக்டரா? ஒரே வரியிலே பதில் சொல்ல.

விமலா: நீ யார் என்பதை கண்டிப்பாக சொல்லத்தான் வேண்டும்.

குண: என் கதையே பெரிய கதை!

விமலா: எனக்கு கதை என்ருல் ரொம்பப் பிரியம் சொல்லு...

குண: இந்தக் கதையில் உன்ஞல் ஒரு அணுவும் ரசிக்க முடியாது.

விமலா: ஆவலை அதிகமாகத் தூண்டுகிருய்! வா என் வீட்டுக்கு!

குண: இல்லே...

விமலா: சும்மாவா! பயப்படாதே! யாரும் இருக்க மாட்டார்கள். (அழைத்து செல்லுகிருள்)

காட்சி—31

[தெருவழியாக பசியால் துடித்துச் செல்கிருள் கல்யாணி]

பின்னணிக் கீதம்

பொருளே இல்லார்க்கு தொல்லையா
புது வாழ்வே இல்லையா
இருள் நீங்கும் மார்க்கம் இல்லையா
இறைவா நீ சொல்லையா [பொரு]

பசியாலே வாடும் பாவி முகத்தை
பார்ப்போர் இல்லையா
எம்மை காப்போர் இல்லையா
ஏழை யெம்மை ஆதரிக்கும்
இரக்கம் இல்லையா
இருள் நீங்கும் மார்க்கம் இல்லையா
இறைவா நீ சொல்லையா [பொரு]

வறுமை பேயை விரட்ட நாட்டில்
வழியே இல்லையா
அதற் கழிவே இல்லையே—
பொருளில்லாதார் இல்லையேனும்—உலகில்
பொருளில்லாதார் இல்லையேனும்
திரு நாளே இல்லையா
இருள் நீங்கும் மார்க்கம் இல்லையா
இறைவா நீ சொல்லையா [பொரு]

[ஒருவன் நாய்க்கு பிஸ்கட் கொடுத்துக் கொண்டு இருக்கிறான். அப்போது கல்யாணி வருதல்]

ஒருவன்: டார்லிங்......

கல்: அய்யா...குழந்தையும் நானும் பட்டினி! குழந்தையின் வயிறு காயுது! பால் வாங்க எதாவது ஒரு அரையணா......

ஒருவன்: போ...போ...

கல்: அந்த நாய்க்கு போடுகிற பிஸ்கட்டிலாவது ஒண்ணு கொடுங்கையா!

ஒருவன்: என்ன சொன்னே? நாய்னு சொன்னே? இது என் டார்லிங்......

காட்சி—32

[குணசேகரன் விமலாவிடம் தன் கதையை கூறுகிறான்]

குண: முத்து எடுக்கப் போய் கிளிஞ்சல் பொறுக்கிய கதையாக மாறியது...... என் தங்கையின் வீட்டில் உற்சாகம் ஊஞ்சலாடும்! மகிழ்ச்சி பொங்கும்! களிப்பு கொஞ்சும் என்றெல்லாம் கனவு கண்டேன்! ஆனால், அங்கே வேதனை விளையாடியது! இந்நிலையில் அறிமுகம் ஒரு கேடா? நானே வறுமையால் அடிபட்டு பைத்தியக்காரனாக மாறினேன்...ஆனால், என் அன்பு தெய்வம் கல்யாணி என் கண்களுக்கு அப்பால் எங்கோ போய்விட்டாள்! தேடுகிறேன்! தேடுகிறேன்!! தேடிக் கொண்டே இருக்கிறேன்!!!

விமலா: உன் கதையைக் கேட்டவுடன் சிரிப்பதா? அழுவதா என்றே தெரியவில்லை!

குண: ஏன்......?

விமலா: உன்னிடம் அன்பு இருக்கிற அளவு அறிவு இல்லையே! இப்படிச் சொல்லுகிறேனே என்று ஆத்திரப்படாதே! நீ உன் பணங்களை பறிகொடுத்த போதே சென்றிருக்க வேண்டும் போலீஸ் ஸ்டேஷனுக்கு!

குண: நான் ஒரு பாவையுடன் போனேன்—பால மறுப்பினேன்— பணத்தை பறி கொடுத்தேன். இதை எப்படி போலீஸிடம் சொல்வது? எனக்கே வெட்கமாயில்லை?

விமலா: வேடிக்கையான மனிதன்! திருடினாய்...பிச்சை எடுத்தாய்—பைத்தியக்காரனாக வீதியிலே திரிந்தாய்! அப்போதெல்லாம் வெட்கம் இல்லை! உன் ஏமாற்றத்தை வெளியே

சொல்லமட்டும் வெட்கப்பட்டிருக்கிறாய்! வெட்கப்படு! நீ மேற்கொண்ட வேலைகளுக்கு. வேதனைப்படு!

குண: நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? சமுதாயமே பிச்சைக்கார மடம்! பைத்தியக்கார விடுதி! திருடர் குகை!

விமலா: ஆம்! சமுதயம் பிச்சைக்கார மடம்தான்—ஆனால், அதில் நீ திருவோடு இல்லாத பரதேசி! சமுதாயம் பைத்தியக்கார விடுதிதான்—ஆனால், அதில் நீ கல் எறியத் தெரியாத பைத்தியக்காரன்! சமுதாயம்—திருடர் குகைதான்! ஆனால், அதில் நீ கன்னக்கோல் வைக்கத் தெரியாத திருடன்! சமுதாயத்தை காரசாரமாக திட்டுகிறாயே! இப்போது யோசித்துப் பார்! உனக்குத் தெரியாமலே நீ சமுதாயத்தோடு சேர்ந்து, நீயும் முட்டாள் ஆகி இருக்கிறாய்!

குண: முட்டாள்!

விமலா: ஆம்! ஆயிரம் முறை சொல்லுகிறேன்! எத்தனை பேர் பிச்சைக்காரர்களாக இருந்து லட்சாதிபதியாகி இருக்கிறார்கள்! எத்தனை பேர் பைத்தியக்கார வேஷத்தில் இருந்து பணக்காரர்களாக மாறி இருக்கிறார்கள்! தேவாலய திருப்பணி—திருமாலுக்கு திருவிழா! இந்தத் திரையிலே எத்தனை பேர் வாழ்கின்றனர்! நீயும் மாறினாயே—திருடனாய், பித்தனாய்-பிச்சைக்காரனாய்! முடிந்ததா மோகன வாழ்வுபெற?

குண: எனக்கு வேண்டியது மோகன் வாழ்வு அல்ல! என் தங்கை கல்யாணி!

விமலா: இப்போதும் குற்றம் சாட்டுகிறேன் உன்னை! நீ ஒரு சுயநலவாதி! உன் தங்கைக்காக, அவளது சொரூப வாழ்வுக்காக நீ அலையும்போது—வீதியிலே, வீட்டு ஓரத்திலே, வீட்டு வாசலிலே பசி பசி என்று விம்மி அழுது கண்ணீரும் கம்பலையுமாக இருப்பவர்களெல்லாம் யார்? நீ ஒரு கல்யாணியை தேடி அலையும் போது வீதியிலே ஒருகோடி கல்யாணி! இதையெல்லாம் நினைத்து உன் நெஞ்சு, உயிர், உடல் துடித்ததுண்டா?

குண: எனக்கு ஏன் துடிக்க வேண்டும்! இந்த கேடுகெட்ட சமுதாயத்துக்கு, நன்றிகெட்ட நாட்டுக்கு, ஏழைகளை மிதித்து வாழும் எத்தர்களுக்கு துடிக்கவேண்டும்—நெஞ்சு, உயிர், உடலெல்லாம்......

விமலா: அதிலே நீ ஒரு அங்கம்!

குண: ஆனால் ஏழை!

விமலா: ஏழையாக்கபட்டாய்! நாட்டை திட்டுவது உன் நலத்துக்கு அல்ல! இப்போது உன்னிடம் பணத்தை பறித்த அந்த நாடோடியை பாராட்டுகிறேன்.

குண: பாராட்டுகிருயா?

விமலா: ஆம்! பாராட்டுகிறேன்! நீ மட்டும் ஏழையாக்கப் படாவிட்டால் உனக்கு ஏழையின் உலகம் எப்படி இருக்கும் என்றே தெரியாது. மாளிகையிலே வீசும் தென்றலை அனுபவித் திருப்பாய்! குடிசையிலே குமுறும் புயலை கண்டிருக்க மாட்டாய்! சமுதாயக் கோணங்களை வெறுக்க கற்றிருக்கிருய்! எரிமலையை அணைக்க தண்ணீர் ஊற்றுகிருய்! மலைப் பாம்பை அடக்க மகுடி ஊதுகிருய்! சமுதாயப் புரட்சி ஆலகால விருட்சத்தின் கிளையை வெட்டுவது அல்ல! அதன் ஆணிவேரையே வெட்டுவதாகும்! நீ மட்டும் ஏழையாக்கப் படாவிட்டால் சமுதாய மேடு பள்ளங்களை பார்த்திருக்க மாட்டாய்!

குண: போதும்......போதும்......

விமலா: மன்னித்துக்கொள்! அதிகமாகப் பேசிவிட்டேன்! பாலைவனத்தை பூஞ்சோலையாக்க உன்னை மாதிரி மண்ணைவாரி இறைக்கக் கூடாது.

குண: உலகப் புத்தகத்தின் அனுபவ ஏடுகளை இப்படி புரட்டுகிருயே! இதற்கெல்லாம் ஆசிரியர் யார்?

விமலா: எல்லாம் அண்ணுதான்!

குண: அண்ணுவா?

விமலா: அதான் முன்பே சொன்னேனே! எனக்கு ஒரு அண்ணன் உண்டு என்று. எங்கள் குடும்பமே விசித்திரமானது. இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்ற எதார்த்த உலகத்தில் சஞ்சரிப்பவர் அப்பா! அண்ணுவோ புதுமை உள்ளம் படைத்தவர்! அவருடைய தங்கை நான்!

[அன்றிரவு......]

குண: கல்யாணி காட்டிலோ? மேட்டிலோ? நான் இங்கே கட்டிலிலே! ரோம் நகரம் எரியும்போது "நீரோ" மன்னன் பிடில் வாசித்துக்கொண் டிருந்தாளும்! சே...சே...கல்யாணி......

[விமலா கனவு காண்கிருள் கனவிலே......]

புதுப் பெண்ணின் மனசைத் தொட்டுட்டுப் போறவரே
உங்க எண்ணத்தை சொல்லி விட்டுப் போங்க
இளமனசைத் தூண்டிவிட்டுப் போறவரே
அந்த மர்மத்தைச் சொல்லிவிட்டுப் போங்க (புது)

உம்மை எண்ணியேங்கும் என்னிடத்தில் சொல்லாமல்
இருட்டு வேளையிலே யாரும் காணுமலே
திருட்டுத்தனமாய் சத்தம் செய்யாமலே
சந்தித்திருந்த தெல்லாம் சிந்தித்துப் பாராமலே (புது)

என்னை—சுத்திப் பறந்த வண்டே சும்மா நீ போகாதே
புத்தம் புது மலரின் தேனைச் சுவைத்துப் போவாயே
என்—இன்பக் கனவையேனோ கலக்கிறாய்?
அன்புக் கயிறிதுதான், அறுக்க யாராலுமாகாதய்யா (புது)

(விடிந்ததும்)

விமலா: குணு! நான் இலட்சியவாதி என்று நினைத்துப் போய்விட்டாயா? இலட்சிய வாதி என்றால் காதலை வெறுத்த மணிமேகலையாகவா இருக்க வேண்டும்! தண்ணகியாகவும் இருக்கலாமே!

காட்சி 33

(இடம்:- அகதி முகாம்)

ஆபீஸர்: தகப்பன் பெயர்?

வந்தவன்: பரமசிவம் பிள்ளை.

ஆபீஸர்: உன் பெயர்?

வந்தவன்: இராமச்சந்திரன்!

ஆபீஸர்: இராமச்சந்திரம்...பிள்ளை...

வந்தவன்: எனக்குப் பிள்ளை கிள்ளை ஒண்ணும் இல்லீங்க!

ஆபீஸர்: அட! ஜாதியய்யா!

வந்தவன்: அதுதானே கிடையாது.

ஆபீஸர்: தகப்பனர் தொழில்?

வந்தவன்: தொழில்... தகப்பனர்தானுங்க.

ஆபீஸர்: (அடுத்தவனைப் பார்த்து) நீ எங்கேயா இங்கே வந்தே? மொத்தமே நூறு பேருக்குத் தானய்யா இடம்.

வந்தவன்: நம்ம டில்லிக்காரங்கய்யா! கொஞ்சம் பெரிய மனசு வையுங்கோ!

ஆபீஸர்: பெயர்?

வந்தவன்: சொரன்லால்.

அடுத்தவன்: நீ என்னேக்கய்யா டில்லிபோயி சேரப்போறே?

(ஞானசேகரன் நொண்டிக் காலுடன் வருதல்)

நொண்டி: அய்யா......

ஆபீஸர்: இனிமேல் இடம் இல்லே—போங்க.

நொண்டி: நாங்க ஒரு கூட்டமே...

ஆபீஸர்: ஒருத்தனுக்கே இடம் இல்லே...

நொண்டி: அப்படியானுல் நாங்களெல்லாம் எங்கே போறது?

ஆபீஸர்: என்னேயே வந்து வழிகாட்டச் சொல்றியா? எங்கேயாவது விழுந்து சாவுறதுதானே!

நொண்டி: கால் ஒடிந்த பிறகும் பல மாதங்கள் பட்டினி கிடந்து படாத பாடுபட்டு பசியுடன் பாதை யோரத்திலே நடந்து வந்திருக்கிறேம். எங்களே பர்மாவுக்கு அனுப்பிய பாரதத் தாய் இந்த நிலையில் எங்களே பட்டினி போடமாட்டாள் என்ற நம்பிக் கையுடன் தான் வந்திருக்கிறேம்! சாவதாக இருந்தால் பார்மா விலே...குண்டு வீச்சுக்கு பயப்படாமல் எதிர்த்து நின்ருல் ஒரே தடவையில் பத்தாயிரம் பேர் செத்திருப்போம். ஆனல், சாவ தற்கு வரவில்லே. சங்கடப்பட்ட உள்ளத்திற்கு சாந்தி கேட்கவே வந்தோம்.

ஆபீஸர்: சட்டப்! இதென்ன ஆபீஸா? ஒங்க வீடா? இடம் இல்லேயின்னு போவியா!

நொண்டி: இடம் இல்லே......வந்தவர்களே யெல்லாம் வா வேற்ற தேசத்தில் பிறந்தவனுக்கு இடம் இல்லே! உங்களேப் போன்ற இதயம் மற்றவர்கள் இருக்கும் வரை மனிதாபிமானத் துக்கே ...என்? மனச் சாட்சிக்கே இடமில்லே! அன்புக்கு அறத் திற்கு இவை அத்தனேக்குமே இடம் இல்லே. கசாப்புக் கடைக் குப் பெயர்—கருணேமஹால்! இதற்குப் பெயர் அகதி முகாம்! வாருங்கள் போவோம்.

இடம்: ஆலமரத்தடி

ஒருவன்: இப்படி சீரழிவதைவிட சிறைச்சாலேக்குச் செல்ல லாம்.

நொண்டி: பொறு தம்பி! திட்டவட்டமாக எதையும் யோசிக்காமல் அவசரத்தில் எதுவும் செய்துவிட்டால் சிறைச்

சாலேக்குச் செல்ல வேண்டியதுதான்! நம்முடைய நிலே உலகத்துக்கு தெரியாது. பிச்சைக்காரர்கள் நாம் மட்டுமல்ல! இந்த நாடு பூராவுமே பரந்து கிடக்கின்றனர்! முதலில் பிச்சைக்காரர்கள் அத்தனே பேரையுமே ஒன்று சேர்க்கவேண்டும்! நம்முடைய திட்டங்களே வீடு வீடாகச் சென்று வெளியிடுவதும் இல்லாமல் நாடறியப் பரப்புவதே நலம்! நம்முடைய குரல் "அரகரா மகாதேவா" என்று கைலாசத்துக்கு எட்டி புண்ணியம் இல்லே! அரசாங்கத்துக்கு எட்டவேண்டும்! நாம் மூட்டி விடுகிற புரட்சி தீயைக்கண்டு அரசாங்கம் நடுநடுங்கவேண்டும்! ஆகவே பிச்சைக்காரர்களேயெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு மகாநாடு ஒன்று நடத்தவேண்டும். அந்த மகாநாட்டுக்கு "சென்னே மாகாண பிச்சைக்கார மகாநாடு" என்று பெயரிட வேண்டும்.

[சிரிக்கின்றனர்]

ஏன் சிரிக்கிறீர்கள்? சிந்தனே செய்து பாருங்கள்! அதிலே சிறந்த தீர்மானம் நமக்கு வோட்டுரிமை வேண்டுமென்பது! அதைப் பெற்றுவிட்டால் நாம் எலெக்ஷனில் கூட நிற்கலாம்! நம்மை எதிர்த்து போட்டிபோட எவரும் முன்வர மாட்டார்கள்! நமக்காக தேசக்கட்சிகள் எதுவும் பாடுபடுவதாகத் தெரியவில்லே. எப்படியோ மகாநாடு நடக்க வேண்டும்! அதிலே தீப்பொறி பறக்கும் தீர்மானங்கள் நிறைவேற வேண்டும். நமது உரிமைக் குரலே உரக்க எழுப்ப வேண்டும்! நமது போர் முரசை வேகமாக தட்டவேண்டும்! அப்படியானல்தான் வருங்காலத்தில் வகையோடு வாழ்வதற்கு வழி வகுக்க முடியும். பிச்சைக்கார மகாநாடு!!

கூட்டம்: வேண்டும்!!!

நொண்டி: நான் வசூலுக்கு கிளம்புகிறேன். (போதல்)

காட்சி—34

இடம்: அகதி முகாம்

கல்: அண்ணு! இரங்கூனில் இருந்து அகதிகள் எல்லாம் வந்திருக்காங்களாமே'

ஆபீஸர்: ஆமா! யாரு வேணும்?

கல்: சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன்.

ஆபீஸர்: அப்படி ஒருவரும் இல்லேயே! அதோ அந்த ஆலமரத்தடியிலே ஒரு கூட்டம் இருக்கு—அங்கே போயி விசாரி.

(கல்யாணி போகிருள்)

கல்: அண்ணே! நீங்க ளெல்லாம் பர்மாவிலே இருந்து தானே வர்றீங்க?

ஒருவன்: ஆமா! அகதிகளா வந்தோம் — ஆண்டிகளா போயிட்டோம்.

கல்: இரங்கூனிலே என் அண்ணன் மார்களைத் தெரியுமா?

ஒருவன்: அவுக பேரு என்ன?

கல்: சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன்.

ஒருவன்: ஊ...ஹூம்...நாங்க மொத்தமே இவ்வளவு பேரு தான். இதிலே உன் அண்ணன் மார்கள் இருக்காங்களான்னு பாரு! (கல்யாணி பார்க்கிறாள்—இல்லை)

காட்சி—35

(பசி கல்யாணியை வாட்டவே ஆகாரத்திற்காக பிச்சை கேட்கிறாள்.)

கல்: அய்யா! குழந்தையும் நானும் சாப்பிட்டு ஆறுநாள் ஆகுது.

வீட்டு: நாங்க சாப்பிட்டு மூணு நாள் ஆகுது! நீ பிச்சைன்னு தெருத் தெருவா கேட்குறே! நாங்க வீட்டுக்குள்ளேயே இருக்கோம். இது தான் வித்தியாசம். இன்னிக்கு ஜட்ஜி சேகர் வீட்டிலே விருந்து! அங்கே போயி கேளு.

கல்: எந்த வீடய்யா?

வீட்டு: அதோ...தெரியுது பாரு! அந்த மூலைவீடுதான்!

(கல்யாணி போகிறாள்)

காட்சி—36

(வசூலுக்குப் போயிருந்த நொண்டி வருதல்)

நொண்டி: இராகவா! இன்னிக்கு ஏதாவது விசேஷம் உண்டா?

இராகவன்: பாவம்! ஒரு பிச்சைக்காரி...ஒரு குழந்தையுடன் வந்தாள்! நீங்களெல்லாம் யாருன்னு கேட்டாள். நாங்க இரங்கூன்லே இருந்து சம்பாதிச்சிட்டு வர்றோம்னுசொன்னோம். ரங்கூனிலே என் மூன்று அண்ணன்மார்களைத் தெரியுமான்னு கேட்டாள். தெரியாதுன்னு சொல்லிட்டோம்.

நொண்டி: அவர்களது பெயரை என்னவென்றுசொன்னாள்?

ஒருவன்: அது நம்ம தமிழ் நாட்டு பெயராகவே தெரியலையே!

நொண்டி: நீ படித்தவனுச்சே! உனக்கு தெரிஞ்சிருக்குமே

இராக: என்னமோ... சந்திரசேகரன்...

நொண்டி: சந்திரசேகரன்...ஞானசேகரன்...குணசேகரன் என்றுளா?

எல்லோரும்: ஆம்!

நொண்டி: அய்யோ கல்யாணி என் தங்கை! கல்யாணி! கல்யாணி! (என்று கதறி கீழே விழுகிறுன்)

காட்சி—37

(சந்திரசேகரன் வீட்டில் வந்து பிச்சை கேட்கிறுள்கல்யாணி! ஆனுல்...)

கல்: அய்யா! குழந்தையும் நானும் பட்டினி!

சேகர்: சரி! அப்புறமா வா!

கல்: அய்யா! நல்லா இருப்பீங்க!

சேகர்: உனக்கு ஒருக்கா சொன்னுல் தெரியலையே!

கல்: அய்யா! உங்களுக்கு கோடி புண்ணியம்!

சேகர்: புண்ணியம் பார்த்து பார்த்துத்தான் தங்கச்சி முகத்தையே பார்க்க முடியாயல் போச்சி! (என்று கல்யாணியை காலால் உதைத்து கீழே தள்ளுகிறுர் ஜட்ஜ் சேகர்.)

கல்: அட பாவிகளே! நீங்க சகோதரர்கள் கூட பிறக்க வில்லையோ? உங்கள் கண்ணில் பஞ்சடைத்து விட்டதா? பாவம்—புண்ணியம்—நரகம் என்று பேசும் அஹிம்ஸா மூர்த்திகளே! கருணையைப்பற்றி கடைந்தெடுத்த கனவான்களே! நரகம் என்று ஒன்று இருந்தால் அதிலே உங்களுக்கு இடம் சரியாய்ப் போய் விடும்! சரியாய் போய்விடும்!! (வேலைக்காரனுல் விரட்டப்படுகிறுள்) கண்ணே! ஆடம்பரத்துக்கும், அக்கிரமத்துக்கும் அடங்கி நடப்பதுதாண்டா இந்த உலகம்! இந்த உலகத்தில் நமக்கு வாழ இடம் கிடையாது. என்ன பார்க்கிறுய்? என் கண்ணிலே வடியும கண்ணீர் பாலாக இருக்கக் கூடாதா என்று பார்க்கிறுயா? உன் அப்பாவும் மாமாவும் இருந்தால்... நீதான் உன் அப்பாவை கர்ப்பத்திலேயே விழுங்கி விட்டாயே! அழாதே! பசியை என்னுலே தாங்க முடிய வில்லை! உன்னுல் எப்படி தாஙக முடியும்? வா போவோம்.

காட்சி—38

(தங்கையைத் தேடி தேடி அலைந்த குணசேகரன், எல்லையற்ற சோகக்கடலிலே மிதந்து, தன் நெஞ்சக் குமுறலை பாடல் மூலம் பராசக்தி கோயில் முன் உட்கார்ந்து வெளியிடுகிறான்.)

நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைத்துவிட்டால் [நெஞ்சு]

அஞ்சியஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனை பேய்களென்பார்—இந்த
மரத்திலென்பார் அந்தக் குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டிலென்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார் [நெஞ்சு]

கஞ்சி குடிப் பதற்கிலார்—அதன்
காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரிதவித்தே உயிர் துடி துடித்தே
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்க ஓர் வழியுமில்லையே [நெஞ்சு]

(குணசேகரன் பாடி முடித்தவுடன்)

குப்பன்: அண்ணே! நீ பாடின தெல்லாம் சரிதான்!

குண: இந்தப் பாட்டை நான் பாடலே குப்பா! இந்தப் பாட்டை நான் பாடி இருந்தால் எல்லோரும் அடிக்க வருவாங்க! இது வேற ஒருத்தர் பாடியது.

பூசாரி: டேய்! குப்பா! தடிமுண்டம்! பூசைக்கு நேரமாகுது! மணி அடிக்க வாடா! குணசேகரன் போய்விடுகிறான்.)

குப்பன்: என்னண்ணே! போற? நாளைக்கு வர்றியா?

(பூசை முடிந்தவுடன் கல்யாணி வருகிறாள்.)

கல்: தாயே! பராசக்தி எனக்கு நீதான் கதி? என் குழந்தையை நீதான் காப்பாற்ற வேண்டும்.

பூசாரி: யாரது?

கல்: கதியற்றவள்! பெயர் கல்யாணி!

பூசாரி: நீ என் மகள் மாதிரி இருக்கே! என் தாயை தாராளமாக வணங்கு. (கல்யாணி உள்ளே போகிறாள்) ஆஹா! என்ன அழகு! என்ன வாலிபம்!! என்ன உடம்பு! இன்று இவளை விடக்

கூடாது! வழி? பலாத்காரம்! பலாத்காரமா? ஆம்! பராசக்தி கோவிலிலா? வேறு எங்கே செய்வது பூசாரி? சுட்டகல்லை தெய்வம் என்று அம்பாளையும், பக்தர்களை ஏமாற்றினாய்... இதைச் செய்வதில் என்ன? பராசக்தி இருக்கிறாள் என்று பார்க்கிறாயா? அவள் இருந்த இடத்திலேயேதான் இருப்பாள்! நகரமாட்டாள்! கற்பழிப்பதா? ஆம்! ஹீம்... தாமதிக்காதே!

[இவையெல்லாம் பூசாரியின் மனச்சாட்சி]

பூசாரி: (கல்யாணியின் கையை பிடித்து) கல்யாணி! வித்தியாசமாக நினைக்காதே! வியாதியுள்ள பெண்களை தொடுவதற்கு எப்படி டாக்டருக்கு உரிமை இருக்கிறதோ—அதுபோல் அழகுள்ள பெண்களை தொடுவதற்கு ஆண்டவர்களுடைய அடியார்களாகிய எங்களுக்கும் உரிமை உண்டு!

கல்: சீ! காமப்பேயே......தாயே! பராசக்தி!

[கல்யாணி கற்பழிக்கப்படுகிறாள்]

(குப்பன் இக்காட்சியைக் கண்டு மணியை அடித்துவிடுகிறான். புலி வாயின் பிடியிலிருந்த புள்ளிமான் தப்பி ஓடுகிறது.]

காட்சி—39

[கற்பழிக்கப்பட்ட கல்யாணி..."உயிர் நீப்பர் மானம் வரின்" என்ற உண்மையை எண்பிக்க...பாலத்தின் மீது தன் குழந்தையுடன்.]

கல்யாணி: கண்ணே! இதோ நம் உலகத்துக்குப் பாதை! அந்த உலகத்துக்குப் போய்விட்டால் பசியே கிடையாது! உலகத்தின் பெயரைச் சொல்லி என் உயிரை வாங்கப் போகிறாயே அம்மா என்று கெஞ்சுகிறாயா? முடியாது! எந்த உயிருக்காக இந்த பாழும் உயிரை சுமந்தேனோ..... அந்த உயிரை கொல்லத்தான் போகிறேன்! இந்த வஞ்சக உலகில் உன்னை தனியாக வாழவிட முடியாது! என் மடியிலே தவழும் மாணிக்கமே! உன்னை இந்த ஆற்றிலே தவழவிடத்தான் போகிறேன். சோறுபோட சொரணையற்றவர்கள் விழுந்து சாவதற்கு இந்த ஆற்றையாவது வெட்டினார்களே! வா போவோம்! வறுமை இல்லாத இடத்துக்கு! உன் கடைசி முத்தத்தைக் கொடு! கொடுக்க மாட்டாயா? கன்னித் தமிழ்! கட்டி முத்தம் ஒன்று கொடு! உன் கடைசி முத்தத்தை இந்தக் காதகியின் காய்ந்த முகத்திலே கொடு! கொடு!!

[குழந்தையை தூக்கி ஆற்றிலே எறிகிருள் கல்யாணி! அப்போது போலீஸ் வந்து கல்யாணியை விரட்ட அவளும் ஆற்றில் குதிக்க அவளை சிறை பிடிக்கின்றனர் போலீஸ்கள்.]

(அதே சமயம் இன்னொரு இடத்தில் குணசேகரன்....]

குண: இப்படிக் கஷ்டப்படுவதைவிட சாவது எவ்வளவோ மேல்! வைரக் கல்லில் சம்மட்டி அடி விழுந்து நொறுங்குவதைப் போல் எங்கள் குடும்பம் குலைந்து நொறுங்கிவிட்டதே! கல்யாணி எங்கோ போய்விட்டாள்! சகோதரர்கள் என்னவானர்களோ? ஞானசேகரன், சந்திரசேகரன்.........

காட்சி—40

இடம்: நீதிமன்றம்.

[நீதிபதி—மே...! குற்றவாளி கூண்டிலே! கல்யாணி!]

கல்: (மௌனம்)

நீதிபதி: இப்படி மௌனம் சாதிப்பது கோர்ட்டை அவமதித்ததாகும். மௌனமாக இருந்து நிரபராதி யாகிவிட முடியாது. உன் மீது சாட்டப்பட்ட குற்றம்......கொலைக் குற்றம், தற்கொலை முயற்சி! குழந்தையை ஏன் கொன்ருய்? பதில் சொல்! உன் ஊர் எது? உன் பெயரையாவது சொல்! குழந்தைக்கு தகப்பன் யார்? தகப்பன் பெயர் தெரியாத குழந்தையா?

கல்: ஆம்! தகப்பன் பெயர் தெரியாதுதான்! பச்சைக் குழந்தைக்கு எப்படி தகப்பன் பெயர் தெரியும்? நீதிபதி அவர்களே! திருப்பி திருப்பி எதையும் கேட்காதீர்கள்! தீர்ப்பை கூறி விடுங்கள்!

நீதிபதி: விசாரிப்பதற்கு முன் தீர்ப்பு எப்படி கூறுவது? இவ்வழக்கைப் பற்றி நீ என்ன சொல்லுகிருய்?

கல்: நான் என்ன சொல்லுவது? உங்கள் சட்டம் என்ன சொல்லுகிறதோ—அதன்படி செய்யுங்கள்.

நீதிபதி: அப்படியானல் குழந்தையை கொன்றது குற்றம் தானே?

கல்: உங்கள் சட்டப்படி குற்றமாக இருக்கலாம்! ஆனல், நியாயப்படி அல்ல!

நீதிபதி: குழந்தையை கொன்றதுதான் நியாயமோ?

கல்: ஆம்! பெறுவதற்கு எப்படி உரிமை இருந்ததோ—அதுபோல நான் பெற்றேன்—நான் அழித்தேன்!

நீதிபதி: ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அரசாங்கத்துக்கு சொந்தமானவை!

கல்: சொந்தம்! சோற்றுக்காக கஷ்டப்பட்டோம்—சுகத்தை தேடி சுற்றி அலைந்தோம்...சொறி நாயினும் கேவலமாக நடத்தப்பட்டோம்—பசி பசியென கதறி அழுதோம், துவண்டோம், புழுவென துடித்தோம்—நெளிந்தோம் அப்போதெல்லாம் சொந்தம் பாராட்டி ஆதரிக்க வரவில்லை இந்த அரசாங்கம்! அநீதி உலகில் இருக்காமல் இறப்புலகில் இன்பம் காண்போம் என்று போனால் சட்டம் என்னும் கையை நீட்டி சொந்தம் என்ற சூழ்ச்சிமொழி பேசுகிறது அரசாங்கம்! அதிசயமான சட்டம்! அற்புதமானநீதி!

நீதிபதி: குதர்க்கம் பேசாதே! குழந்தையை ஏன் கொன்றாய் என்பதற்கு மட்டும் பதில் சொல்.

கல்யாணி: பசியால் பதறினான் என் பாலகன்! வெட்கம் இல்லாமல் சொல்லுகிறேன்—இங்கு இருப்பவர்கள் அத்தனை பேரையும் சகோதரர்களாக பாவித்து. என்னை வாழவிடாமல் என் வாலிபம் எனக்கு இடையூறாக இருந்தது. வண்ணஞ் சிறு வலையில் விழாததால் குழந்தையை தூக்கிக் கொண்டு திரிந்தேன். எனக்கே ஆகாரம் இல்லாமல் இருக்கும் போது குழந்தைக்கு எப்படி பால் இருக்கும்? ஆகவே, குழந்தையை வளர்க்க வழி இல்லாமல் நானே கொன்றேன்.

நீதிபதி: எப்படியும் குழந்தையை காப்பாற்றி இருக்க வேண்டும்!

கல்யாணி: என் குழந்தை என்ன திருஞான சம்மந்தரா? பார்வதி வந்து பால் கொடுத்துக் காப்பாற்ற! நான்தானே காப்பாற்ற வேண்டும்!

நீதிபதி: எப்படியும் குழந்தையைக் கொன்றது குற்றம்!

கல்: நான் குழந்தையை கொன்றது குற்றம் என்றால்—நல்லதங்காள் தன் ஏழு குழந்தைகளையும் கிணற்றிலே போட்டுக் கொன்றாளே! அது எவ்வளவு பெரிய குற்றம்? நல்லதங்கள் கதை

நாடெங்கும் நடத்தப்படுவது ஏன் நிறுத்தப்படவில்லை? பிள்ளைக் கறி சமைத்தார் சிறுத்தொண்டர் என்றெல்லாம் பெருமை பேசு கிறார்களே! அவர்கள் கற்றுக்கொடுத்த பாடத்தைத்தானே நானும் செய்தேன்! இது எப்படி குற்றமாகும்?

நீதிபதி: நல்லதங்காளையும், சிறுத்தொண்டரையும் காரணம் காட்டி கோர்ட்டை அவமதிக்கக் கூடாது. உன் ஆத்திர உணர்ச்சி சமூகத்தையோ, சட்டத்தையே அவமதித்ததாக இருக்கக் கூடாது! நடந்ததைச் சொல்.

கல்யாணி: நான் மட்டும் கொஞ்சம் உதட்டை அசைத்திருந்தால் உப்பரிகையிலே உலாவி யிருப்பேன். விதவையாக அல்ல— விஷமம் பிடித்தவளாக அல்ல—விபச்சாரியாக! விபச்சாரியாக!! அதைத்தானே இந்தச் சட்டம் எதிர் பார்க்கிறது. அப்படித்தானே இந்தச் சமூகத்தை எதிர்க்க முடிகிறது! அப்படித்தானே இந்த சமுதாயத்தை எதிர்க்க முடிகிறது. வேறு எப்படி முடியும்? அதுவும் அனாதையால்......

நீதிபதி: நீ அனாதையா?

கல்யாணி: ஆம்! அனாதை! காலம் என்னை அனாதையாக்கியது!

நீதிபதி: கதை பேசாதே! விஷயத்தைச் சொல்!

கல்யாணி: நான் பிறந்த மறுநாளே என் தாயார் இறந்துவிட்டாள்! தகப்பனாரின் நிழலிலேயே வளர்ந்து வந்தேன்! எனக்கு கல்யாணமெல்லாம் நன்றாகத்தான் நடந்தது, தந்தையும் இறந்தார்! கணவரையும் இழந்தேன். எனக்கு தமையன்மார்கள் மூன்று பேர்! அவர்களின் முகத்தை நான் சரியாகக்கூட பார்த்தது கிடையாது! இளமையிதிலேயே இரங்கூனுக்கு சென்றுவிட்டனர்! அவர்களின் பெயர் சந்திரசேகரன், ஞானசேகரன், குணசேகரன்! என் கல்யாணத்தைக் காண வருவார்கள் என்று நினைத்து வழிமேல் விழிவைத்துக் கிடந்தேன். வரவில்லை! நாட்டிலே எனக்கு கிடைத்த பதில் "போடி வேலையற்றவளே!" குழந்

தையைத் தூக்கிக்கொண்டு பிச்சைக்காரியாய் கிளம்பினேன்! நீதிபதியாம்! நேர்மையை அனுஷ்டிப்பவராம்! பிச்சை கேட்கச் சென்ற என்னை பூட்ஸ் காலால் உதைத்தார்.

[நீதிபதி·சேகர் தன் தங்கை கல்யாணி என்று தெரிந்து அதிர்ச்சி அடைந்து கீழே விழுகிறார்.]

காட்சி—41

(ரோட்டிலே பிரசங்கி பேசுகிறார்)

பிரசங்கி: உலகப் பேரழகி கிளியோபாட்ரா தமிழ் நாட்டு முத்துக்களை சாராயத்தில் போட்டு குடித்தாளாம்! அத்தகைய தமிழ்நாட்டு மக்கள் இப்போது இரங்கூனுக்கும், சிங்கப்பூருக்கும் சம்பாதிக்கச் சென்று ஆடவர்கள் அனுப்பும் பணத்தை எதிர் பார்த்து பட்டினி கிடக்கின்றனர்! ஆலயங்கள் இங்கே! ஆண்டவனுக்கு வைரக் குல்லா! இரத்தின கவசம்! தங்கச் சிம்மாசனம்! ஆனல், ஆண்டவனின் அருமைக் குழந்தைகளோ அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழி இல்லாமல் திண்டாடுகின்றனர்! கேள்விப்படுகிறோம் மக்களே! குழந்தை விலைக்கு விற்கப்படுகிறது. குழந்தையை விற்கிறாள் தாய்!

பத்துமாதம் படாதபாடுபட்டு சுமந்து பெற்ற தாய், பாலூட்டி சீராட்டி வளர்த்த தாய், தொட்டிலிலே போட்டு ஆராரோ பாடிய தாய், வெள்ளிக் கிண்ணத்திலே சோறு போட்டு தாழ்வாரத்திலே தவழ்ந்தோடும் தன் பிள்ளைக்கு ஊட்டவேண்டும் என்று நினைத்த தாய்! மஞ்சள் நீராடி மகனின் மழலை மொழி கேட்க துடித்துக் கிடந்த தாய்! மகன் பெரியவனாகியதும் "பள்ளிக்குச் செல்லடா மகனே" என்றுகூறி மகன் பள்ளிக்குச் செல்லும் பின்னழகைக் காணவேண்டு மென்று நினைத்த தாய்! மகனுக்கு கல்யாணம் செய்து வைத்து—மகனும், மருமகளும் மஞ்சத்துக்குச் செல்லும் அந்த நாளும் வந்து விடாதோ என்று ஏங்கிக் கிடந்த தாய்! தன் வயிற்றிலே பிறந்த இரத்தினத்தை, வைரத்தை, வைடூரியத்தை, கோமேதகத்தை, தங்க தாம்பாளத்தை விலை கூறுகிறாள்

"பிள்ளேயோ பிள்ளே" என்று மார்கெட்டிலே "கீரையோ கீரை" என்பது போல.

எட்டு அணுவுக்கு குழந்தை! ஐந்து ரூபாய்க்கு குழந்தை! மூன்று ரூபாய்க்கு குழந்தை! பெரிய குழந்தை ஐந்து ரூபாய்—பிஞ்சுக் குழந்தை மூணு ரூபாய்! கொடுமை! கொடுமை! இதோ இன்னொரு கொடுமை! குழந்தைக்கும் தனக்கும் உணவு கிடைக்காத காரணத்தால் குழந்தையைக் கொன்றுவிட்டு—தானும் தற்கொலை செய்து கொள்ளப்போகும் சமயம் போலீஸிலே பிடிபட்டு கோர்ட்டிலே குற்றவாளிக் கூண்டிலே மரண தண்டனைக்காக காத்திருக்கிருள் கல்யாணி என்ற பெண்.

(இதைக் கேட்டுக்கொண் டிருந்த குணசேகரன் எழுந்து ஒடுகிருன். எதிரே பட்டர் குப்பனை சந்திக்கவே—தன் தங்கை கல்யாணி பூசாரியால் கற்பழிக்கப் பட்டாள் என்பதை அறிந்து ஆத்திரத்துடன் பாாசக்தி கோவிலுக்கு செல்லுகிருன்)

காட்சி—42

இடம்: காளியம்மன் கோயில்

[பூசாரியின் தடபுடல்கள், காவடிகள், அம்மாளுக்கு ஆராதனைகள் அர்ச்சனைகள் மாரிவிழா! ஒரே அமர்களம். பாடைக் காவடியொன்று மாரியம்மன் சன்னதிக்கு வருகிறது, பூசாரியின் அதிதீவிர பூசைக்குப்பின் பாடையிலிருந்தவன் எழுகிருன்.]

எல்: ஆயி! ஆயி! உன் அருளே அருள்.

கிழவி: மகாமாயி! தாயே! என் மவனுக்காகச் செலுத்த வேண்டிய பிரார்த்தனையைச் செலுத்திட்டேன். என் குடும்பத்தை காப்பாத்துடி தாயே!

பூசாரி:—பிள்ளையாண்டானுக்கு வைசூரி வந்திருந்ததோ?

கிழ: ஆமாம், அம்மா குதிகொண்டிருந்தா, என் புள்ளே உடம்பிலே ஒரு வில்லங்கமும் வாராம இருந்தா பாடைக் காவடி கட்டுரேன்னு வேண்டிக் கிட்டேன். என்னமோ அவ பாக்கியத்துலே

அவனுக்கு ஒரு கண் மாத்திரம் போயி, அவ சக்தியாலே புழைச்சிட்டான்...அந்த பிரார்த்தனையைக் கட்டத்தான் வந்தேன்...... பூசாரி ஐயா, உங்க கையாலே கொஞ்சம் நல்ல விபூதியா கொடுங்க.

பூசாரி: தர்ரேன்.

கிழ: நல்லா அம்பாளை வேண்டிக்கிட்டு அவன் ஆயுசுக்கு ஒரு கொறவும் வரக்கூடாதுண்ணு சொல்லிக் கொடுங்க.

பூசாரி: தீர்க்காயுசா இருப்பான். எப்ப அம்பாளுக்கு பக்தனுயிட்டானே அவனுக்கு ஒரு குறையும் வராது. ஆயுசு அசல் கருங்கல்லுமாதிரிதான்.

[மாரியம்மனுக்குப் பின்னுலிருந்து ஒரு குரல் கிளம்புகிறது.]

குரல்: எய்! பூசாரி! முதலில் உன் ஜாதகத்தைக் கவனித்துக் கொள்.

பூசாரி: யார், அம்பாளா பேசறது?

குர: அம்பாள் எந்தக் காலத்திலே பேசினுள்? அறிவு கெட்டவனே.

பூசாரி: மாரியாத்தா! என்ன தாயே சொல்லுகிருய்?

[மாரியாத்தா! "ஹ ஹ ஹ!" இந்த பெருஞ் சிரிப்போடு குணசேகரன் வெளிப்படுகிருன்]

இந்த மாரியாத்தா உனக்குத் தாய்! என் தங்கை கல்யாணி உனக்கு தாசி. மானங்கெட்டவனே! அப்படித்தானே?

பூசாரி: யார்? என்ன விபரீதமப்பா?

குண: விபரீதம் வருமென்று தெரியாத காரணத்தால்தான் என் தங்கையோடு விளையாடி இருக்கிருய் நீ! பக்தர்கட்கு ஆசீர்வாதம் புரியும் பரம பாதகா நீ இப்போது கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிருய்! இவர்கள் அத்தனைபேரும் நீதிபதிகள். தீர்ப்பு கூறட்டும்.

பூசாரி: ஆயி! பராசக்தி!

குண: அது பேசாது...கல்!......அது பேசுவதா யிருந்தால் என் தங்கையின் கற்பை நீ சூறையாடிய போது "பூசாரி! அறிவு கெட்ட அற்பனே நில்!" என்று தடுத்திருக்காதா?....உன்னுடைய பலாத்கார அணைப்பிலே சிக்கிய என் தங்கை ஆயிரம் தடவை இந்த மாரியாத்தாளை அழைத்தாளாமே...இவளுக்கு உயிர் இருந்தால் ஓடிவந்து அபயம் கொடுத்திருக்க மாட்டாளா?

பூசாரி: பக்தகோடிகளே! பார்த்துக்கொண் டிருக்கீங்களே

குண: ஏன் மனித உதவியை நாடுகிறாய்? மாரி பக்தனே! உன் மாரியிடம் சூலம் இருக்க, சுழலும் வாளிருக்க, சுக்குமாந் தடியிருக்க ஏன் பயந்து சாகிறாய்?

பூசாரி: அபச்சாரம்! அபச்சாரம்!! அபச்சாரம்!!

குண: ஹ ஹ ஹ! எது அபச்சாரம்? அம்பாள் சன்னதியை ஆனந்த அறையாக்கிக் கொண்டது அபச்சார மில்லையா? ஆலிங்கன விடுதியாக்கிக் கொண்டது அபச்சாரமில்லையா? கன்னிகளின் கற்பை யழிக்கும் காமக்கோட்டை யாக்கிக் கொண்டது அபச்சார மில்லையா?

ஏ! பூசாரி சாவுக்கு துணிந்து வந்துவிட்டேன். எனக்குத் தெரியும் நான் செய்யப்போகும் வேலைக்கு எது வெகு மான மென்று! தூக்கு மேடை! அதைப் பற்றிக் கவலையில்லை. புழுத்துப் போன சமுதாயத்திலே உன்போன்ற பூசாரிகள்...புண்யவான் வேஷம் போடும் நாடகத்தை விட்டுக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்திற்கு என் செய்கை ஒரு பாடமா யிருக்கட்டும்.

பூசாரி: என்னடாப்பா! மாரி விழாவிலே கலாட்டா செய்யறே!

[என்று கூறி குணசேகரனை வெட்ட கத்தியை எடுக்கிறான் அதை குணசேகரன் பிடுங்கிக் கொண்டு...]

குண: விழா! என் தங்கையின் வாழ்வை விஷமாக்கி விட்டு...உனக்கும் உன் மாரிக்கும் விழா! இதோ பார் இந்த கத்திக்கு விழா! வீர விழா! வெற்றி விழா!

[பூசாரியின் தலையில் வெட்டுகிறான். போலீஸ் அவனை இழுத்துச் செல்லுகிறது.]

காட்சி 43

[நீதிபதி சேகர் பைத்தியத்துடன்.]

சேகர்: கல்யாணி! கல்யாணி! என் கல்யாணி ஏழை! அவளுக்கு நல்ல சேலை கிடையாது. ஒரே புடவை! ஒட்டுத்துணி...... அவளுக்கு வைர நெக்லஸ் கிடையாது. அவள் கழுத்திலே கயிறு தான் இருக்கும்! அய்யோ......அதுகூட கிடையாது. அவள் விதவை!

சரஸ்வதி: டாக்டர்!

டாக்டர்: பயப்படாதீங்க! மூளைக் கொதிப்பு! மருந்து கொடுத்தால் சரியாகப் போய்விடும்!

சேகர்: மருந்து! ஹ...ஹ...எனக்கா? மருந்து எனக்கு வேண்டாம்! ஏழைகளுக்கு பசியாமல் இருக்க ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்க டாக்டர்! கொடுங்க டாக்டர்! கொடுங்க மாட்டீரா? கொடுக்க மாட்டீரா? கொடுக்காட்டி குழந்தைகளை ஆற்றிலே போட்டுவிடுவார்கள் டாக்டர்......ஆற்றிலே போட்டுவிடுவார்கள். என் கல்யாணியும் அப்படித்தான் செய்துவிட்டாள். கல்யாணி! கல்யாணி!! கல்யாணி!!!

காட்சி 44

[நீதிமன்றத்தில் குணசேகரன்]

குண: நீதிமன்றம்! விசித்திரமான பல வழக்குகளை சந்தித்திருக்கின்றது! பல புதுமையான மனிதர்களையும் கண்டிருக்கிறது. ஆனால், இங்கே வந்திருப்பது விசித்திரமான வழக்கும் அல்ல—வழக்காடும் நான் புதுமையான மனிதனும் அல்ல. சாதாரண வாழ்க்கையிலே தென்படும் ஜீவனுள் நானும் ஒருவன். கோவிலிலே குழப்பம் விளைவித்தேன்—பூசாரியை தாக்கினேன்! இப்படியெல்லாம் நான் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன். இதையெல்லாம் நான் இங்கே மறுப்பேன் என்று நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள்! இல்லை! நிச்சயமாக இல்லை! கோவிலிலே குழப்பம்

விளைவித்தேன். கோவில் கூடாது என்பதற்காக அல்ல—கோவில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக! பூசாரியைத் தாக்கினேன்! அவன் பக்தன் என்பதற்காக அல்ல—பக்தி பகல்வேஷமாகி விட்டது என்பதை கண்டிப்பதற்காக!

(வக்கீல் எழுந்திருத்தல்)

உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை? உலகத்திலே யாருக்கும் இல்லாத அக்கறை? என்று கேட்பீர்கள்! இதிலே என் சுயநலத்தோடு பொது நலமும் கலந்திருக்கிறது. ஆகாரத்துக்காக அலிக்கத்தை சாப்பிட்டு தடாகத்தை சுத்தப் படுத்துகிறதே மீன் அதைப் போல! என்னை குற்றவாளி என்கிறீர்களே! இந்தக் குற்றவாளியின் வாழ்க்கைப் பாதையிலே கொஞ்ச தூரம் பின் தொடர்ந்து வந்து பாருங்கள்! அவன் கடந்து வந்த காட்டாறுகள் எவ்வளவு என்பது தெரியும்! என் வாழ்வு மயில் ஒலிக்கும் சோலையல்ல—படமெடுக்கும் பாம்புகள் நிறைந்தது. தென்றலை தீண்டியதில்லை நான்—ஆனல், தீயை தாண்டி இருக்கிறேன். நீதிபதி அவர்களே! தீர்ப்பு எழுதுவதற்கு முன் என் கதையைப் பற்றி கொஞ்சம் கேளுங்கள்! இத்தமிழ் நாட்டின் திருவிடத்திலே பிறந்தவன் நான்! பிறக்க ஒரு நாடு—பிழைக்க ஒருநாடு! தமிழ் நாட்டின் தலை விதிக்கு நானென்ன விதிவிலக்கா? இரங்கூன்—அது என் உடம்பை வளர்த்தது. என்னை உயர்ந்தவனாக்கியது. தங்கையின் திருமணத்தைக் காண ஓடிவந்தேன்! வரும் வழியில் ஒரு பாவையுடன் போனேன்—பணப்பெட்டியை பறி கொடுத்தேன்! பசியால் மெலிந்தேன்; நௌிந்தேன் கடைசியாக பைத்தியக்காரனாக அடிபட்டு திரிந்தேன். அவள் தான் மோசடி வழக்கிலே ஈடுபட்டு குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் இதோ இந்த ஜாலக்காரி ஜாலி! காணவந்த தங்கையை கண்டேன் கண்ணற்ற ஓவியமாக! ஆம்! கைம்பெண்ணாக! தங்கையின் பெயரோ கல்யாணி! மங்களமான பெயர்! ஆனல்...கழுத்திலோ மாங்கல்யம் கிடையாது. கண்ணிலே கண்ணீர்! கையிலே குழந்தை! கல்யாணி அலைந்தாள் ஊர் ஊராக! கல்யாணிக்காக நான் அலைந்தேன்! கல்யாணிக்காக கருணை காட்டினர் சிலர்! அவற்றிலே காளையர் சிலர் அவளது

காதலை கைமாருக கேட்டனர்! அதிலே குற்றம் சாட்டப்பட்டு கூண்டிலே நிற்கிருனே......கொடியவன் வேணு! இவன் என் தங்கையை பகட்டால் மயக்க முயற்சித்தான்! நான் தடுத்திருக்காவிடில் கல்யாணி அன்றே தற்கொலை செய்திருப்பாள்! கடவுள் பக்தர்கள் சிலரும் கைகொடுத்து காப்பாற்ற முன் வந்தனர். ஆனல் கடைக்கண் பார்வையை கைமாருக விரும்பினர். அவர்களில் தலைவனுக இருந்ததில் இதோ இந்த பூசாரியும் ஒருவன்! அதற்கு பிரதி உபகாரமாக அவனது கடைக்கண் போய்விட்டது. என் தங்கையின் கற்பை காணிக்கையாக கேட்டிருக்கிருன்! தன் குழந்தையை இரக்கமற்ற இந்த உலகத்திலே கல்யாணி விட்டுச் செல்ல விரும்பவில்லை! வறுமையால் வளர்க்க முடியாமல் அவளே கொன்றிருக்கிருள்!

நீதிபதி: குழந்தையைக் கொன்றது குற்றம்!

குண: விருப்பமானவர்களைக் கொல்லுவது விந்தையல்ல! உலக உத்தமர் காந்தி! அஹிம்ஸா மூர்த்தி! ஜீவகாருண்ய சீலர் அவர் வளர்த்த கன்றுக்குட்டி நோயால் வாடுவதை காண சகிக்காமல் அவரே—அவரது வாயால் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டிருக்கிருர்! அதே முறையைத்தான் கல்யாணியும் கையாண்டிருக்கிருள். இது எப்படி குற்றமாகும்? பகட்டு என் தங்கையை விரட்டியது — பயந்தோடினுள், பணம் என் தங்கையை துரத்தியது—மீண்டும் ஓடினுள்-பக்தி என் தங்கையை பயமுறுத்தியது—ஓடினுள்! ஓடினுள்!! வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினுள்!!! அவள் ஓட்டத்தை தடுத்திருக்க வேண்டும்; வாட்டத்தை போக்கியிருக்க வேண்டும் சட்டத்தை நீட்டுவோர்! செய்தார்களா? என் தங்கையை வாழ விட்டார்களா?

வக்கீல்: குற்றவாளி யார் குற்றத்திற்கோ வக்கீலாக மாறுகிருர்!

குணசேகரன்: யார் குற்றமும் அல்ல—அதுவும் என் குற்றம் தான்! தங்கையின் வாழ்வை கெடுக்க நினைக்கும் மாபாவிகளை பின் தொடர்வதில் அண்ணன் மீது என்ன குற்றம் இருக்

கிறது? கல்யாணி தன் குழந்தையைக் கொன்றது முதல் குற்றம்! தான் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தது இரண்டாவது குற்றம்! நான் கோவிலிலே குழப்பம் விளைவித்தது மூன்றாவது குற்றம்! இந்த மூன்று குற்றங்களுக்கும் காரணம் யார்? முதலில் கல்யாணி தன் குழந்தையைக் கொல்ல காரணமாக இருந்தது யார் யார்? கல்யாணியை கஞ்சிக்கு வழி இல்லாமல் அலைய விட்டது யார் குற்றம்? விதியின் குற்றமா? அல்லது பிழைக்க வழி இல்லாமல் விதியைச் சொல்லி வயிறு வளர்க்கும் வீணர்களின் குற்றமா? பணம் படைத்த கொள்ளைக்காரர்களை பெருகவிட்டது யார் குற்றம்! பஞ்சத்தின் குற்றமா? அல்லது பஞ்சத்தை மஞ்சத்துக்கு வரவழைக்கும் வஞ்சகர்களின் குற்றமா? கடவுளின் குற்றமா? கடவுளின் பெயரால் புண்ணியவான் வேஷம் போடும் போலி பூசாரிகளின் குற்றமா? அல்லது—கடவுளின் பெயரைச் சொல்லி கதா காலட்சேபம் நடத்தும் கயவர்களின் குற்றமா? என் தங்கை கெடுக்கப்பட்டாள்! கடவுளின் பெயரால்! உலக மாதாவின் பெயரால்! ஆனல் என் தங்கை கொஞ்சம் விட்டுக் கொடுத்திருந்தால் கோடீஸ்வரன் வீட்டுப் பள்ளிஅறையிலே ஒரு நாள்—மானத்தை விலை கூறி யிருந்தால் மாளிகை வாசியின் மடியிலே ஒருநாள்...இதைத்தானே இந்த நீதிமன்றம் விரும்புகிறது? வெளி நாட்டில் பிழைக்கும் ஒரு தமிழனுக்கு தமிழ் நாட்டில் வாழ வசதி கிடையாது! தமிழ் நாட்டிலே பிழைக்கும் பெண்களுக்கு சரியான பாதுகாப்பு கிடையாது! அது வரை கல்யாணிகளும் குணசேகரன்களும் குறையப்போவது இல்லை! இதுதான் எங்கள் வாழ்க்கையின் எந்த எட்டைப் புரட்டினுலும் நாங்கள் கற்றுக் கொண்ட பாடம், பகுத்தறிவு, பயனுள்ள அரசியல் தத்துவம்.

நீதிபதி: குற்றவாளியை தண்டிக்க தனிப்பட்ட எவருக்கும் உரிமை கிடையாது! உன்னுடைய வாக்கு சர்க்காரையோ, சட்டத்தையோ அவமதித்ததாக இருக்கக் கூடாது. நடந்ததை சொல்லத்தான் உனக்கு உரிமை கொடுக்கப்பட்டதே தவிர அநாவசியமாக எதையும் பேசக்கூடாது. உன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல். கல்யாணி உண்மையிலேயே உன் தங்கைதானு?

குண: இந்தக் கேள்வி தங்களுக்கே வேடிக்கையாக இல்லே...

நீதிபதி: சரி! கல்யாணியை வரச் சொல்.

(கல்யாணி கொண்டு வரப்படுகிறாள்)

குண: (ஆவலுடன்) கல்யாணி! கல்யாணி!!

நீதிபதி: இவன் உன் அண்ணன்தானா?

கல்யாணி: இல்லே! கிறுக்கண்ணா என்று கூப்பிடுவேன்! சொந்த அண்ணன் கிடையாது.

குண: கல்யாணி! நான் உன் சொந்த அண்ணன்! நான்தான் குணசேகரன்.

நீதிபதி: என்னம்மா?

கல்யாணி: அவருக்கு கொஞ்சம் பைத்தியம்.

குண: ஆம்! பைத்தியம்தான்! பைத்தியக்காரனாக நடித்தேன். என் தங்கையின் வாழ்வை வேதனைப்படுத்தக் கூடாது என்பதற்காக! நீதிபதி அவர்களே! தயவு செய்து இதை நம்பி விடாதீர்கள். எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள். எப்படியாவது என் கல்யாணியை காப்பாற்றுங்கள்.

நீதிபதி: அதைப் பற்றி நீ பேசக் கூடாது. அது குழந்தையை கொன்ற குற்றம்.

(இந்நேரம் விமலா கல்யாணியின் குழந்தையுடன் வருகிறாள்.)

விமலா: இல்லே! இல்லே! கல்யாணி குற்றம் செய்யவில்லே. குழந்தையும் கொல்லப் படவில்லே. இதோ இருக்கிறது கல்யாணியின் குழந்தை.

குண: விமலா!

விமலா: குணா!!

நீதிபதி: குழந்தை எப்படி உன்னிடம் கிடைத்தது?

விமலா: நிலவுக் கால இரவில் நான் வழக்கமாக ஆற்றில் படகில் செல்லுவது வழக்கம்! அப்போது இந்தக் குழந்தை என் படகில் வந்து விழுந்தது. குழந்தை யாருடையது என்று தெரியாமல் நானே வளர்த்து வந்தேன். சுற்றுப் பிரயாணம் சென்றிருந்த என் அண்ணு வந்து சேர்ந்தார்.

[திருப்புக் காட்சி]

விமலாவின் வீட்டிலே......

விமலா: வாங்க அண்ணு!

அண்ணு: இந்தக் குழந்தை யாருடையது?

விமலா: வழக்கமாக நான் படகில் செல்லும்போது இந்தக் குழந்தை படகில் வந்து விழுந்தது. யார் குழந்தை என்று தெரியாமல் எடுத்து வளர்த்தேன்.

அண்ணு: கல்யாணியின் குழந்தையாக இருக்கலாமோ?

விமலா: யாரைச் சொல்லுகிறீர்கள்?

அண்ணு: பட்டினியால் குழந்தையைக் கொன்று, தானும் தற்கொலை செய்து கொள்ளப்போகும்போது கல்யாணி என்ற பெண் பிடிபட்டாள்.

[என்று செய்தியை வாசிக்கிருர்]

(திருப்புக் காட்சி)

கோர்ட்டிலே

விமலா: உண்மையை அறிந்த நான் குழந்தையை தூக்கிக் கொண்டு ஓடிவந்தேன்.

நீதிபதி: இவர்களை யார் என்று உனக்குத் தெரியுமா?

விமலா: தெரியும்! இவர் குணசேகரன்! குணசேகரன் தங்கை கல்யாணி!

கல்யாணி: (குண சேகரனைப்பார்த்து) அண்ணு!!!

குண: கல்யாணி!

நீதிபதி: வேடிக்கையான வழக்கு!

(இறுதியில் "கல்யாணி—குணசேகரன்" இவர்களது வழக்கு முடிவு பற்றி நீதிபதி கருணை காட்டலாம் என்று சிபார்சு செய்கிறார்—கல்யாணி, குணசேகரன், விமலா ஆகிய மூவரும் நீதிபதி சேகர் (சந்திர) வீட்டுக்கே போகின்றனர் ஆனந்தத்துடன்.)

காட்சி—45

[ஞானசேகரன் நொண்டி) நன்கொடை வசூல் செய்யவருகிறான்.]

ஞான: அய்யா! பிச்சைக்கார மகாநாடு ஒன்று நடத்தப் போகிறோம்! அதுக்கு......எதாவது நன்கொடை...

வீட்டு: எம்பா! ஒங்களுக்கு வேறே வேலையில்லே?

ஞான: வேலை இல்லாமல்தானுங்க நடத்துறோம்.

வீட்டு: நாங்க ஒங்களுக்கெல்லாம் நன்கொடை கொடுத்தால் நாங்களும் ஒங்க கூட சேர்ந்துவிட வேண்டியதுதான். போ...போ...

காட்சி—46

[சந்திரசேகரன் வீட்டிற்கு விடுதலை யடைந்து வருகிறார்கள். அப்போது......]

சந்: கல்யாணி! கல்யாணி!

கல்: அண்ணா! அண்ணா! என்னைப் பாருங்கள்.

குண: அண்ணனுக்கு என்ன செய்யுது அண்ணி!

சரஸ்வதி: இதோ கல்யாணி! உங்கள் தங்கை!

சேகர்: இல்லை! அவளை அவள் அண்ணன் காலால் உதைத்துவிட்டான். அவள் ஆற்றிலே விழுந்து விட்டாள்! இல்லை! அவளுக்கு அவள் அண்ணன் தூக்குத் தண்டனை விதித்து விட்டான்.

குண: அண்ணா!

சேகர்: நான்தான் ஜட்ஜ்மென்ட் எழுதினேன்! அண்ணனாக இருந்தால் என்ன? தங்கையாக இருந்தால் என்ன? குற்றம் குற்றம்தான்.

சரஸ்வதி: இதோ பாருங்கள்! கல்யாணியின் குழந்தை!

[சேகருக்கு பைத்தியம் மாறுகிறது யார் என்பதை அறிந்து, குணசேகரனையும் கல்யாணியையும் அன்புக்கரங்களால் கட்டித் தழுவி ஆனந்த கண்ணீர் வடிக்கிறார்.]

(இந்நேரம் ஞானசேகரன் நன்கொடைக்கு வருகிறான்.]

சரஸ்வதி: யாரது?

விமலா: நீங்க இருங்க நான் போய் பார்த்து வருகிறேன்.

என்ன வேண்டும்?

ஞான: அம்மா!.ஐயா இருக்காங்களா?

விமலா: ஏன்?

ஞான: நாங்க ஒரு பிச்சைக்கார மகாநாடு நடத்தப் போகிறோம். அதற்கு நிதி கேட்க—

(சிரிக்கிறாள்)

எம்மா சிரிக்கிறீங்க! இப்ப அப்படித்தான் இருக்கும்! இன்னும் கொஞ்சநாள் போனா பிச்சைக்காரனும் மந்திரி ஆகிவிடுவான்.

வீட்டு வேலைக்காரன் மூலம் ஞானசேகரன் என்று கண்டு கொள்ளப்படுகிறான்.)

[அண்ணன், தம்பி, தங்கை அத்தனை பேருமே ஆனந்தமாக ஒன்று சேருகின்றனர்.]

(சிதறிய குடும்பம் சிந்தை மகிழ இருக்கிறது.)

விமலா: நான் வர்றேன்......

குண: இதுக்குள்ளேயா?

விமலா: வீட்டிலே தேடுவாங்க!

குண: அப்புறம் உன்னை எப்ப பார்க்கிறது?

விமலா: பார்க்கவே முடியாது!

குண: ஏன்?

விமலா: அது......அப்படித்தான்

விமலா: சரி! போ......

[விமலா குணு கட்டிய கயிறுல் நிறுத்தப்படுகிருள்.]

குண: இன்பக் கனவை ஏனோ கலைக்கிருய்

அன்பு கயிறிதுதான், அறுக்க யாராலுமாகாதய்யா
புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போறவரே
உங்க எண்ணத்தை சொல்லிவிட்டுப் போங்க

சேகர்: என்னப்பா குணசேகரா!!

சரஸ்வதி: தம்பீ! இதுக்கு இவ்வளவு பெரிய கயிறு தேவை இல்லையே! சின்னக் கயிறு......கழுத்துக்கு பொறுத்தமா இருந்தாலே போதும்! அதிலே ஒரு மஞ்சள்......

குண: அதெல்லாம் இந்தக் காலத்துக்கு தேவை இல்லே அண்ணி! ரெண்டு மாலே, ஒரு சொற்பொழிவாளர். விஷயம் முடிஞ்சுது.

கல்யாணி: அதோடு மட்டும் போதாது! என் பையனுக்கு ஒரு பொண்ணு ஒண்ணு பெத்துக் கொடுக்கணும்!

குண: வாங்க......அம்மா! ஒரு காலணுவுக்கு இட்லி தர் தீங்களா? ஏன் சிரிக்கிறீங்க? மந்திரி நமது மாநகர்தன்னில் மாதம் மும்மாரி பொழிகின்றதா? (என்று பழைய நாடகத்தை நினேவூட்டுகிருன்)

ஞான: சரிதான்! அப்போ நீங்களெல்லாம் இங்கேயே இருங்க—நான் வர்றேன்.

சேகர்: ஏன் தம்பி? நீ எங்கே போறே?

ஞான: இங்கே பங்களா, ஆபீஸின்னு நீங்கள் பழகிட்டீங்க, நானு பரதேசிமடம், ஆலமரம் இப்படி பழகிட்டேன்! ஒங்களுக்கும் நமக்கும் ஒத்து வராது.

கல்யாணி: அப்போ நானும் வர்றேன்.

குண: நானும் புறப்பட்டுட்டேன் அப்படின்னு!

விமலா: எல்லோருமே பரதேசி மடத்துக்கு போறதுக்குப் பதில், பரதேசிகளை யெல்லாம் பங்களாவுக்கு அழைக்கிறது தான் நல்லது.

சேகர்: ஆமா! அது தான் சரியான யோசனே! ஞான சேகரா! உன் கொள்கைப்படி பங்களா வாசி—பரதேசியாக மாறக் கூடாது. பரதேசிகளைப் பூராவையும் பங்களா வாசியாக மாற்று கிறது தான் நல்லது.

ஞான: அப்படின்னு நான் எல்லோரையும் போயி கூட்டிட்டு வர்றேன்.

[எல்லோரும் உயர்வு தாழ்வு பேதமின்றி—உன்னத கருத்துக்களைக் கொண்டு ஒன்று சேருகின்றனர்.]

காட்சி—47

[சாந்தநாயகி அம்மா அநாதை விடுதி திறப்பு விழா நடக்கிறது. சிறப்புடன் அத் திருப்பணியை அனைவரும் ஒன்று சேர்ந்து நடத்துகின்றனர்.]

எல்லோரும் வாழ வேண்டும்—உயிர்கள்
இன்புற்றிருக்க வேண்டும்
நல்லோர்கள் எண்ணமிது—முத்தம்மா
நல்லற வாழ்வு மீதே (எல்லோ)
கல்லாதா ரேன்றேருவர் நம்மிடையே
இல்லாம லாக்க வேண்டும்
கொல்லாமை போற்ற வேண்டும் மனிதர்கள்
கூட்டுறவாக வேண்டும் (எல்லோ)
இல்லாதாரை படைத்தான் என்றேருவன்
இருந்தால் அழியட்டுமே
இல்லார்கள் உள்ளாரேன்று—முத்தம்மா
ஏனிந்த வேற்றுமைகள் (எல்லோ)

வணக்கம்.

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
ஓடக்காடு, திருப்பூர்.

M. ANGAPPAN
NEWS AGENT
14, CLOTH BAZAAR ST
TIRUPUR.

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
10/8. முத்து நகர் திருப்பூர்.